12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 8—10—1978 | இதழ்-4

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

காட்சி-9

(சூப்பிரண்டெண்ட் சுந்தரம் வீடு. வேலன், பெட்டி படுக்கைகளை எடுத்துப் பயணத்துக்குத்தயாராகவைத்துக் கொண்டிருக்கிறான். சுந்தரமும் தனது உடைகளை எடுத்து வேலனிடம் தந்து பெட்டியில் வைக்கச் சொல்கிறான், சொக்கியும் அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடியாடி பாத்திரங்களையெடுத்துப் பயணத்துக்குத் தயாராக அடுக்கி வைத்து மூட்டை கட்டிக்கொண்டிருக்கிறாள்]

வேலன்: எஜமான்! பட்டணத்துக்குப் போயி இவுங்க அத்தை வீட்டுக்



குப் போறதுக்கு முன்னடி முதல்ல அண்ணா சதுக்கம். பெரியார் நினைவிடம், காமராஜர் நினைவகம், ராஜாஜி நினைவாலயம், வள்ளுவர் கோட்டம் இதெல்லாம் பாத்துடணும்! அப்பறந்தான் இந்த அம்மாளோட அத்தை வீடு; சரிதானு எஜமான்?

சொக்கி: ஏன் அவ்வளவு அவசரம்? அத்தை வீட்டிலே போயி, குளிச்சிட்டு சாப்பிட்டுட்டு சாயங்காலமா போயி, எல்லாத்தையும் நிதானமாகப் பாக்கிறது!

வேலன்: யாரும்மாகண்டா? அதுக்குள்ள இப்ப இருக்கிற அரசாங்கம் அதெல்லாம் கருணாநிதி காலத்தில கட்டினதுன்னு திடீர்னுஇடிக்கச்சொல்லி உத்திரவு போட்டாலும் போட்டுடும்.

(சுந்தரமும் சொக்கியும் சிரிக்கிறார்கள்)

சுந்தரம்; சொக்கி! வேலன் ரொம்பக் குறும்புக்காரன்'...

வேலன்: அது என்னங்க எஜமான் – அம்மாவைப் போயி சொக்கி சொக்கின்னு இன்னும் இந்தக் கிராமத்துப் பேரைச் சொல்லியே கூப்பிடுறீங்க! பேரைக்கொஞ்சம் நாகரீகமா வச்சுக் கூப்பிடுங்க'...

சுந்தரம்: நீதான் சொல்லேன், ஒரு நாகரீகமான பேரு?

வேலன், சொல்லட்டுமா? ஏம்மா! சொல்லட்டுமா?

சொக்கி: சொல்லு!

வேலன்: சொன்ன பிறகு அந்தப் பேர் வேண்டாம்னு சொல்லக் கூடாது!

சொக்கி: சொல்ல மாட்டேன்; நீ சொல்ற பெயரையே வச்சுக்கிறேன்...

வேலன்: ரொம்ப அழகான பேர் மாத்திரம் இல்லே; ரொம்பப்பொருத்தமான பேர்கூட!

சொக்கி: உம்! அப்படியா? என்ன பேர் சொல்லு!...

வேலன்: சுந்தரின்னு வச்சுக்கிங்க!

(சொக்கி வெட்கத்தால் முகத்தை மூடிக் கொண்டு, உள்ளேஓடுகிறாள். சுந்தரத்தின் முகம் மலருகிறது)

வேலன்; ஏன் எஜமான் ஒடுருங்க!'' நான் சொன்ன பேர் பிடிக்கலியா?... எஜமான் பேர் சுந்தரம்னு இருக்கும்போது இந்த அம்மா பேரு சுந்தரின்னுதானே இருக்கணும்,

சுந்தரம்: வேலா?... கேலியும் கிண்டலும் உன் ரத்தத்தோட ஊறிப் போனது...

வேலன்; வேலன் கேலி வெறுங்கேலி இல்லிங்க! என்னுடைய நகைச்சுவை கலைவாணர் நகைச்சுவை மாதிரி கருத்தோட இருக்குமுங்க ...

சுந்தரம்: (சிரித்துக் கொண்டே) சரி! சரி!... கலைவாணரின் மறு அவதாரமே!... போயி ஒரு டாக்சி கொண்டு வா!

வேலன்: எனக்கு அவதாரம், மறு ஜென்மம், ஆத்மா இதிலெல்லாம் நம்பிக்கையில்லிங்க'...

சுந்தரம்: (சிரித்தவாறு) சரி! பெரியாரின் சீடரே! போய் சீக்கிரம் ஒரு டாக்சி கொண்டுவருக!...

வேலன்: இதோ கொண்டுகிட்டு வர்றேன். அதுக்குள்ள நீங்க, அம்மா வெட்கப்பட்டுகிட்டு ஓடியிருக்காங்க; அவுங்களை சமாதானப்படுத்துங்க.

(வேலன், டாக்சி கொண்டுவரப் போகிறான்)

சுந்தரம்: சொக்கி! சொக்கி!

சொக்கி; (வந்துகொண்டே) ஏன்; வேலன் புதுசா வச்ச பேரு உங்களுக்குப் பிடிக்கலியா?

சுந்தரம்: உனக்குப் பிடிக்குதா?

(சொக்கி தலையைக் குனிந்து கொண்டு நிற்கிறாள்.)

சுந்தரம்; என் உள்ளம் உனக்குப் புரிந்துவிட்டது. உன் உள்ளமும் எனக்குப்புரிந்துவிட்டது. இதற்கு மேல்தான் நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்து விடக்கூடாது! என்ன; நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?...

சொக்கி: உண்மைதான்! உங்கள் தகுதிக்கும் என் தகுதிக்கும் ஏணி வைத்தால்கூடஎட்டாது — அவ்வளவு உயர்ந்தவர் நீங்கள்! நான் சாதாரணஒரு கிராமத்து அனுதைப் பெண்!

சுந்தரம்: நான் சொன்னதைத் தவருக எடுத்துக் கொண்டுவிட்டாய்!...

சொக்கி: இல்லே!... நீங்கள் சொன்னதை நான் சரியாகப் புரிந்து கொண்டு விட்டேன்.

சுந்தரம்: நான் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறேன் என்பதை இப்போதே சொல்லிவிடட்டுமா?...

சொக்கி: ஏற்கனவே புண்பட்ட நெஞ்சம் எனக்கு! அது ஆறுவதுபோல் இருந்தால் சொல்லுங்கள்!

சுத்தரம்: சுந்தரி!

(தன்னை சுந்தரி என்று அழைத்ததும் சொக்கி, மகிழ்ச்சிப் பெருக்கால் கண்கள் குளமாக, அவன் கால்களில் விழுகிறாள். சுந்தரம் அவளைத் தூக்கி நிறுத்தி — அன்புடன் அரவணைத்து)

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

எதிர்நீச்சல் வீரர் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சி

பேராசிரியர் க. அன்பழகன்

தந்தை பெரியார் அவர்கள் பிறந்த குடும்பம் பழமையில் ஆழ்ந்த பற்றுக்கொண்டது. வைதிகச் சடங்குகளிலும்—மத நம்பிக்கையிலும் – சாதி ஆசாரத்திலும்—தரும காரியங்களிலும் அழுத்தமான பற்றுடையது.

சிறுவயதிலேயே பெரியார் தான்உள்ளத்தில்பெரியவர்கள் சொல்லும் கருத்து எதுவானாலும் — அதில் நம்பிக்கை ஏற்படுவதற்கு மாருக ஐயம் பிறந்தது. அது ஏன்? எதற்காக? எப்படி? என்னும் கேள்விகள் இயல்பாகவே அவரிடம் பிறந்தன.

பெரியவர்கள்பழக்கத்தால் பலவற்றையும் நம்புகிருர்கள். அப்படி நம்புவதற்கு ஆதாரம் அவர்களுடைய பெரியவர்கள் நம்பியதுதான். அதுவேயன்றி அவர் தாமாக எதையும் சிந்தித்து—ஆராய்ந்து முடிவிற்கு வருவதில்லை—என்று அவர் கண்டார்.

உலகத்தில் மேற்குநாடுகள் பலவும் விஞ்ஞானத்துறை ஆராய்ச்சியில் ஈடுபட்டு மக்கள் வாழ்வுக்குப் பயன்படும் எத்தனையோ துறைகளில் முன்னேறி வருகிறதே; நாம் மட்டும் முன்னேற்றம் அடையவில்லையே; என்ன காரணம் என்று எண்ணிப்பார்க்கலானுர்.

குளிப்பது துணி உடுத்துவது, நகை அணிவது, உண்பது, சடங்குகள் நடத்துவது. கோவில்திருவிழாவில் கூடுவது பண்டிகைகள் கொண்டாடுவது —ஆகிய எதுவானாலும்—அவற்றைச் செய்யாவிட்டால் என்ன என்னும் எதிர்வாதம் அவரிடம் பிறந்தது.

குளிப்பவர் எல்லாம் அழுக்குப்போகவா குளிக்கிருர்கள்? அழுக்குப்போகக் குளிக்கும் வாய்ப்புள்ளபோதுகுளித்தால் போதாதா? என்று எண்ணலானுர்.

துணி உடுத்துவது, ஒரு நாகரிகம் என்று ஆகிவிட்டது. உடுத்தாமல் வாழ்வது 'ஒரு நாகரிகம்' என்று ஏற்பட்டிருந்தால் என்ன கெட்டுவிடும் என்று எண்ணலானுர்.

பெண்கள் எதற்குப் பதினெட்டு முழப் புடவை கட்ட வேண்டும்? வேட்டி அளவு கட்டினுல் போதாதா என்று கருதலானுர்.

உடை ஆடம்பரத்திற்கும் —வீண் பெருமைக்கும்தானே கைக்கொள்ளப்படுகிறது.? எளிய உடை போதாதா? என்று எண்ணலானுர்.

கோவில் திருவிழாவால்—என்ன பயன்? சிலபேர்பிழைக்கப், பலபேர் ஏமாற்றப்பட, வழி செய்வதுதானே திருவிழா என்று எண்ணத்தலைப்பட்டார்.

'பண்டிகை' என்பது - பல்வேறு வகை உணவுகளைத்தயாரித்து உண்ண ஒருவழி. அதற்கு ஏன் வீண் செலவு— முயற்சி— உழைப்பு? என்று கேட்கமுற்பட்டார்.

உணவைத் தயாரிக்க—எத்தனைப்பாடு பெண்களுக்கு? அதற்காகவே பெண்களை அடிமைகளைப்போல அன்றே பழக்கத்துக்கு ஆட்படுத்தியுள்ளோம்! இது தேவைதானு? என்று ஆராயலானுர்.

ஆண்—பெண் இரு இனத்தில் பெண்ணினந்தான் கருவுற்றுப் பிள்ளை பெற்றெடுக்கும் இயற்கை உடையதாக இருக்கிறது. அதற்காகப் பிள்ளை பெற்றெடுத்துக் கொண்டேஇருக்க வேண்டுமா நிறுத்திக்கொள்ள—ஒரு வழி காணக்கூடாதா? அதற்கு அவர்களுக்கு ஏன் உரிமை இல்லை? என்று கேட்கலானுர்.

மனிதரில் ஒருசாரார் - நகத்தில் அழுக்குப்படாமல் சேற்றில் இறங்காமல், உழைக்காமல் உண்டு கொழுத்துப் பரம்பரையாக வாழ்கின்றனரே! இன்னொரு சாரார், காடு மேடுகளில் பாடுபட்டும்—கடின உழைப்பை ஏற்றும்கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றியும் பரம்பரை பரம்பரையாக —நொந்து போகின்றனரே! இந்த முறை எதனுல் பிறந்தது? இன்னுமா நீடிக்கவேண்டும்? என்று எண்ணலானுர்:

மனிதரில் — மேல் சாதி — கீழ்சாதி ஏன் வந்தது! என்ன பயன்? மாருக சமுதாயத்தில் அநீதி அன்ருே தொடர்கிறது? என்று கொதிக்கலானுர்,

இவைகளை நிலை நிறுத்துவது—மதமா? மதத்திற்குஏன் முக்கியத்துவம்? கடவுள் நம்பிக்கையை ஊட்டித்தானே 'மதம்' நிலைக்கிறது. இந்த நம்பிக்கையை மாற்றினுல்தான் என்ன? அநீதியைத்துடைக்க மத மூட நம்பிக்கைகளை அகற்ற வேண்டுமெனில் அவற்றை எதிர்ப்பதுதானே நமதுகடமை என்று சிந்திக்கலானுர்.

பிறப்பால்— சாதி உயர்வு தாழ்வு, மதத்தால் மூட நம்பிக்கைகள் வைதிகத்தால் சடங்குகள் — சாஸ்திர நம்பிக்கைகள்—இதிகாசபுராணங்களைப் பரப்பி பழமையை நிலைநாட்டல் பெண்ணடிமையை நிலை நாட்டும் ஆண் இனத்தின் சுயநலம், உழைக்காமல் —வாழும் தந்திரக்காரர், உழைக்கும் இனத்தைத் தாழ்த்தும் கொடுமை, இப்படிப்பட்ட ஒவ்வொன்றையும் அதன் வேரோடும் வேரடிமண்ணோடும் கல்லி எடுத்து அழிப்பதிலே பெரியார் கருத்தூன்றிச் செயல்பட்டார்.

மதத்தைப் பற்றிப் பெரியாரது கருத்து வடிவெடுத்த முறையை இங்கே அவரது பேச்சிலேயே நாம் காணலாம்!

"மதம் என்பது நாட்டிற்கோஒருசமுதாயத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்கவேண்டியது? ஒரு தேசத்தையோ — சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப் படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டதா? அல்லது மனிதனின் மனசாட்சியைக் கட்டுப்படுத்தக்கூடியதா? மனிதனுக்காக மதமா? மதத்துக்காக மனிதனு? என்பவைகளைத் தயவு செய்து யோசித்துப் பாருங்கள்."

'மதம் என்பது மனிதனின் (சமூக) கூட்டுவாழ்க்கைக்கும். அதற்கேற்ற ஒழுக்கத்திற்கும் ஏற்ற விதிகளைக் கொண்டதேயாகும் என்று சொல்லப்படுமானுல், அம்மாதிரிமதங்களைப் பற்றிச் சுயமரியாதை இடக்கம் (எதிர்க்கவேண்டுமென்று) அதிகக் கவலைப்படுவது கிடையாது.

அதற்கு இயக்கம் அவசியமானுல் உதவியும் செய்யும். மற்றும், மனிதனின் ஆத்மா என்பது கடவுள் என்பதை அடைவதற்காக மதம் ஏற்பட்டது என்ருல் அதைப்பற்றிச் சுயமரியாதை இயக்கம்கவலைப்படுவதில்லை. அப்படிப்பட்ட, அபிப்பிராயக்காரனும், அவனுடைய மதமும் இப்போது எப்படியோபோகட்டும் என்று விட்டு விடுவோம். ஏனெனில் அது தனிப்பட்ட மனிதனைப் பற்றிய காரியம். ஆனுல்மனித சமூகத்தின் அறிவைப் பாழ்படுத்தவும். தன்மானஉணர்ச்சி அறவே இல்லாமல் செய்யவும் மக்களைப் பிரித்து வைத்து உயர்வு தாழ்வு கற்பித்து மனித சமூக ஒற்றுமையைக் கெடுத்து, பொதுமுன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும்தடுக்கும்படியான மதம் எதுவானுலும்—அதை ஒழிக்கச் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டுத் தான் வந்திருக்கிறது."

அதனுல்தான் — ஆதிக்கவாதிகள்யாரேயாயினும்அவர்களெல்லாம்பெரியாரைஎதிர்த்தனர்; ஏளனம் பேசினர், கண்டனஞ் செய்தனர்—பெரியாரின் பேச்சும்—எழுத்தும் நாட்டிலே இடம் பெறவே கூடாது என்று கூடத்திட்டமிட்டனர். 'அறியாமையில்' ஆழ்ந்து கிடந்த மக்களும் அவர்களுக்குத் துணைநின்றனர். ஆனுல் பெரியார் இவைகளைக் கண்டு அஞ்சவில்லை—மாருக தனது பணியில் ஆர்வங் கொண்டார்

வகைவகையான எதிர்ப்பு வந்தபோதெல்லாம் — தனது பணி பயன்படத் தொடங்கி விட்டது — அதனுல்தான் — தமது சுயநலம பறிபோய் விடுமே என்று 'மாற்ருர்' மருண்டு கூச்சலிடுகின்றனர் என்று அவர் கருதலானுர். எனவே எதைப்பற்றியும் கவலைப்படாது எதிர்ப்பைக்கண்டு தளராமல் தமது பணியை அவர் தொடர்ந்தார்.

பெரியார் அவர்கள்—மற்ருெருவகையாலும் — தன்னை

அதற்கேற்ற தகுதியும் உறுதியும் படைத்தவராக ஆக்கிக் கொண்டார்.

பெரும்பாலோர் ஆதரவு
படித்தவர்கள் உடன்பாடு
அறிவாளிகள் பாராட்டு
மக்களிடம் செல்வாக்கு
எல்லோரும் பாராட்டும் புகழ்

இவைகளில் எதையும் அவர் விரும்பவும்இல்லை – இவைகளை அவர் பொட்ருபடுத்தவும் இல்லை.

அவரைப் பொறுத்தவரையில்—இது அவருடையகடமை பிறவிக்கடமை; விளைவு பற்றிக் கவலையில்லை; இதைச் செய்வதிலே அவருக்கு ஒரு மகிழ்ச்சி. அவரே குறிப்பிட்டுள்ளதுபோல் மயிரைக்கட்டி மலையை இழுக்கிருேம்; மலை நகர்ந்தாலும் சரி — மயிர் போனுலும் சரி — என்னும் மனப்பான்மையோடுதான் இவ்வளவு பெரிய அறிவுப் புரட்சியில் தன்னை ஒப்படைத்துக்கொண்டார்.

தந்தை பெரியார் அவர்களின் நூற்ருண்டு விழாவை இன்று நாமும் நாடும் போற்றிக்கொண்டிருக்கிருேம். ஏறத்தாழ நூற்ருண்டு வாழ்ந்தவர் தான் பெரியார். மற்றவர்களைப்போல் அன்றித் தாம வாழ்ந்த காலத்தைத் தமது முத்திரை பொறித்துச் சமுதாயத்தின் வாழ்வில் பதிவு செய்து விட்டவர் பெரியார்.

அவர் வாழ்ந்தார் என்தும் ஒரு செய்தி அல்ல. நம்மிபஒரு பெரிய மாற்றத்தை—விழிப்புணர்ச்சியை, புதிய சிந்தனையை, ஒரு தன்மதிப்பை—தலை நிமிர்ந்து நிற்கும் ஒரு தகுதியை, ஏன்? சுருங்கக் கூறின் நம்மை 'மனிதன்' ஆக வாழச் செய்யும் ஒரு வழியைப் படைத்துத் தந்தவர் பெரியார். ஆம்—பெரியார் வாழ்ந்தார், நாம் மனிதன் ஆனோம்! தமிழர் ஆனோம்; திராவிடர் ஆனோம்! வரலாற்றுப்பெருமை உள்ள ஒரு நாட்டவர் ஆனோம்!

பெரியார் பிறக்காவிடில், அவர் வழி பிறந்த கேள்விகளும், எண்ணங்களும், கண்டனங்களும் பிறக்காவிடில் — நாமெல்லாம் பொட்டுப்பூச்சிகளாக, புன்மைத்தேரைகளாக —பொது அறிவு பெருத— பகுத்தறிவு அற்ற நம்மை நாமே உணராத—ஒரு கூட்டமாக, அடிமை மனப்பான்மை நீங்காத கும்பலாக, :சாமி என்றும் 'ஐயர்' என்றும் 'எசமானென்றும்' 'ஆண்டை' யென்றும்—யார் யாரையோ சொல்லிச் சொல்லி வணங்கி நின்று வளைந்துபோன கூனராக – குருடாக — செயலற்றுப்போன எலும்புக்கூட — ஒதிகையாக உதவாச் [illegible] யாக — அவமானச் [illegible] களாக — ஆள [illegible]

(5ம் பக் [illegible]

புனித ராஜ்யம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம்: இனிமேல்நீஎனக்குச் சுந்தரிதான்!

வேலன்: (பாடிக்கொண்டே வருகிறான்) கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்!...

சுந்தரம்: ஏ, வேலா!...

வேலன்: ஒண்ணுமில்லிங்க. பாரதிதாசன் பாட்டு!... எஜமான்!... ரெண்டு டாக்சிகள் கொண்டுவந்திருக்கேன்... நீங்களும் இவுங்களும் போறதுக்கு ஒண்ணு'... நானும்இந்த மூட்டை முடிச்சு பெட்டி சட்டிகளும் போறதுக்கு ஒண்ணு!...

சுந்தரம்: சரி!...சரி ...டயம் ஆயிடுச்சு புறப்படலாம்.. சுந்தரி!...

வேலன்: எஜமான்!...இன்னொரு தரம் சொல்லுங்களேன்... நான் வர்ச பேரு பொருத்தமா இருக்குல்லே!

(காட்சி முடிகிறது)

போடட்டும் புனிதன் வேடம்!

எல். கணேசன்
பி. ஏ. பி. எல்.
(வெளியீட்டுச் செயலாளர்)

ஆன்றோன், சான்றோன், உத்தம புத்திரன், ஒழுக்க சீலன், புனிதன், புண்ணியன் என்றெல்லாம் மக்கள் தன்னை நம்பிட வேண்டும் என்பது முதலமைச்சர் இராமச் சந்திரன் அவர்களின் ஆசை. அப்படி மக்களை நம்பச் செய்ய அவர் எந்த வேடம் போடவும் தயார்; எந்த 'ஸ்டண்ட்' அடிக்கவும் தயார்; அப்படி அவர் அடிக்கும் ஸ்டண்டிலே ஒன்றுதான் மதுவிலக்கு அவசரச் சட்டம்.

'மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்தப் போகிறேன். சுடுமையான சட்டம்கொண்டு வரப் போகிறேன்' என்று அவர் சட்டமன்றத்தினுள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து முழங்கி வந்தார். அப்படி முழங்கி வந்தவர். திடீர் என்று ஒன்றைப் பிரகடனப்படுத்தினார். ''அமைச்சர்களானாலும் அதிகாரிகளானாலும் மதுவிலக்குக் குற்றம் புரிபவர்கள் சுடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்'' என்று.

புண்ணியரின் இந்தப்புனித அறிவிப்பை வரவேற்றுத் தலைவர் கலைஞர் தமது மதுரை மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது ஒரு கருத்தை வெளியிட்டார்'' முதலமைச்சர் இராமச்சத்திரன் நல்லெண்ணத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வருகிறார் என்று நம்புகிறேன். அது உண்மையாக இருக்குமானால் அவருக்கு ஒரு யோசனை கூறுகிறேன். அமைச்சர்கள் மது அருந்தினால் அவர்களை எந்தக்காவலரும் கைது செய்யத் துணியமாட்டார்கள். அவர்களைக் குற்ற மிழைக்காமல் தடுக்க வேண்டுமானால் அந்தச் சட்டப் பிரிவை அமுல் நடத்தும் அதிகாரத்தை எதிர்க் கட்சித் தலைவர்களின் குழுவிடம் ஒப்படைக்கவேண்டும். அக்குழு எல்லா எதிர்க்கட்சித்தலைவர்களையும் கொண்டதாக இருக்கட்டும். அந்தக்குழுவிடம் ஒரு காவல் துறைப் பிரிவு ஒப்படைக்கப் படட்டும். எதிர்க் கட்சியினர் குற்றம் புரிந்தால் அரசிடம் இருக்கும் காவல் துறை நடவடிக்கை எடுக்கட்டும். ஆளும் கட்சியைச்சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் குற்றம் செய்தால் எதிர்க்கட்சிக்குழுவிடம் இருக்கும் காவல்துறைப் பிரிவு நடவடிக்கை எடுக்கட்டும். இப்படி இரு பிரிவும் இயங்கினால் மதுவிலக்குக் குற்றத்தை முற்றும் ஒழித்து விடலாம்'' என்றார் கலைஞர். முதலமைச்சர் இந்த நல்ல யோசனையை எண்ணிப்பார்த்திருக்கக்கூடும். மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரத்தைஎதிர்க் கட்சிகளின் குழுவிடம் ஒப்படைத்தால் என்ன நடக்கும் என்பதை அவர் எண்ணிப் பார்த்திருப்பார். அமைச்சர்களிலே பெரும்பான்மையினர், சட்டமன்ற உறுப்பினர்களிலே பெரும்பான்மையினர் சிறையிலடைபடக்கூடும். சட்டமன்றத்தில் தன் கட்சி பெரும்பான்மை பலத்தை இழக்கும். ஆட்சி கவிழும். தேர்தல்வரும். தி. மு. க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். கமிஷன் நியமிக்கப்படும், வழக்குத் தொடுக்கப்படும்.

இப்படியேபடிப்படியாக — நீளச் சிந்தித்திருப்பார். இது ஏதடா கிணறு வெட்ட பூதம் கிளம்புகிறதே என்று கதிகலங்கிப்போயிருப்பார். எனவே அறிவிக்கப்பட்ட புதிய சட்டத்தில் அமைச்சர்கள் பற்றி மூச்சே விடவில்லை. அமைச்சர்களானாலும் தண்டிப்பேன் என்று தம்பட்டமடித்த முதலமைச்சர் சட்டத்தில் அது பற்றிக் குறிப்பிடாததேன்?

தலைவர் கலைஞரின் யோசனையை முன்னாள் முதலமைச்சர் முதியவர் பக்தவத்சலம் ஏற்றுக்கொண்டிருக்கிறார். கா. கா. தே. கா. தலைவர் குமரி அனந்தன் அந்த யோசனையை வரவேற்றிருக்கிறார். ஆனால் முதலமைச்சரோ மூச்சு விடக் காணோம்.

அது மட்டுமில்லை; சட்டத்தில் எத்தனையோ ஓட்டைகள் எத்தனையோ சந்தேகங்கள் — நியாயபூர்வமான சந்தேகங்கள். தண்டனை பெற்ற அரசு அதிகாரிகள் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களா தண்டனை முடிந்ததும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்களா? அமைச்சர்கள் அரசு அலுவலர்களின் (Public Servants) அடங்குகிறார்களா? அல்லது அவர்கள் அதிலே அடங்கவில்லையா?

இன்னொன்று — அடிப்படையான ஒன்று, சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமமே என்பது அடிப்படையான ஜனநாயகக் கோட்பாடு. ஒரே குற்றத்தைச் செய்யும் இருவருக்கு வெவ்வேறு தண்டனை என்பது இந்தக் கோட்பாட்டைத் தகர்க்க வில்லையா? அரசியல் சட்டத்திற்கே இது முரண்பட்டதில்லையா? அப்படி முரண்பட்டதானால் அச்சட்டமே செல்லாததாகாதா? எழுத்தர், மேலாளர், கண்காணிப்பாளர், பொறியாளர் என இன்னபிறபணியாளர்கள் அலுவலர்கள் பொதுத்துறையில், தனியார் துறையில், அரசுத்துறையில் உண்டு. எத்துறையில் பணியாற்றினாலும் அவர்கள் பணி ஒன்றே அரசுத் துறையில் பணியாற்றினால் அதிகத் தண்டனை என்றும், பிறதுறையில் பணியாற்றினால் தண்டனை குறைவென்றும் கூறுவது இயற்கைச் சட்ட நீதிக்கு (Law of Natural Justice) பொருந்துமா? இயற்கை நீதி இருக்கட்டும் அரசியல் சட்டத்தின் அடிப்படைத் தன்மைக்கே (Basic Features of the Constitution) பொருந்துமா? இப்படி எத்தனையோ கேள்விகள் எழுகின்றன. சந்தேகங்கள் முளைக்கின்றன.

அவசரச் சட்டம் என்ற பெயரிலே இல்லாமல் சட்டமன்றத்திலே ஒம் மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்கினால் இந்த ஓட்டைகள் அடைக்கப்படவும் சந்தேகங்கள் நீக்கப்படவும் வாய்ப்புஉண்டே, அந்த வாய்ப்புக்களை ஏன் முதலமைச்சர் நழுவவிட்டார்? அவசரப்பிரச்சினையில் - அவகாசம் இல்லாத வேளையில் அவசரச் சட்டம் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வருவதே ஜனநாயக மரபு.

முதலமைச்சரோ சாராயம் காய்ச்சுவோரின் பட்டியலைப் பெற்றே பல மாதங்கள் ஆகின்றனவே; இதுகுறித்து இவர் கடந்த பல மாதங்களாகவே பேசி வருகிறாரே! சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேகூட மசோதா கொண்டு வந்து சட்டமாக்கி இருக்கலாமே! ஏன் செய்யவில்லை? செய்யாததற்கு என்ன உள்நோக்கம்? முதலமைச்சரின் எச்சரிக்கைப்படி அவருடைய கட்சி 'சாராய சாம்ராஜ்யாதிபதிகள்' எல்லாம் தங்கள் ஸ்டாக்கை எல்லாம் விற்று விட்டார்களா?

அவர்கள் விற்று விட்ட பிறகு மற்றவர்கள் மாட்டிக் கொண்டால் என்ன என்ற எண்ணமா? அவசரச் சட்டம் பிறப்பிக்கத்தேவையற்ற ஒன்றிற்காக அவகாசம் நிரம்ப இருந்தும் அவசரச் சட்டம் பிறப்பிப்பது ஜனநாயக விரோதச் செயல் அல்லவா?

முதலமைச்சருக்கு மற்றுமோர் வினா:

மதுவிலக்குக் குற்றம் மலிந்ததற்குச் சட்டமே இல்லாததா காரணம்? மது காய்ச்சினாலும் அருந்தினாலும் குற்றம் என்றுதான் ஏற்கனவே சட்டம் இருக்கிறதே! சட்டமிருந்தும் எம். ஜி இராமச்சந்திரன் ஆட்சியில் சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாக இருந்தது ஆலைத் தொழிலாக மாறியது எப்படி? சிறு தொழிலாக (Small Scalo Industry இருந்தது பெருந்தொழிலாக Large Scalo Industry) மாறியது எப்படி? சிறு முதலாளிகளை விழுங்கி பெரு முதலாளிகள் உருவானது எப்படி? அதுவும் அந்தப் பெரு முதலாளிகள் அவருடைய கட்சிக்காரர்களாகவே ஆனது எவ்வாறு? சட்டம் இருந்தது. ஆனால் அச்சட்டத்தைச் சரியாக அமுல்படுத்தவில்லை; எம் ஜி. இராமச்சந்திரன் ஆட்சி. அவருடைய கட்சியின் பாதுகாவலர்கள் — நன்கொடையாளர்கள் எல்லாம் சாராய சாம்ராஜ்யாதிபதிகளாக இருக்கும்போது எப்படி அவர் அமுல்படுத்துவார்? இப்போது சட்டத்தைக் கடுமையாக்கினால் எப்படி குற்றத்தைப் போக்கமுடியும்?

ஏற்கனவே இருக்கும் சட்டத்தைச் சரியாக அமுல்படுத்த இப் புதிய சட்டம் எப்படித் துணை புரியும்? வேண்டுமானால் 'சாராய சாம்ராஜ்யத்தின்' பெரு முதலாளிகளை ஏகபோக முதலாளிகளாக்கப் பயன்படும். ஆயிரக்கணக்கில் கட்சிக்கு அல்லது கட்சிக்காரர்களுக்குவந்து கொண்டிருந்த நன்கொடை லட்சக்கணக்கில்கோடிக்கணக்கில் இனிமேல் வரக்கூடும். இது தவிர உருப்படியான பயன் என்ன கிட்டும்?

தலைவர் கலைஞர் குறிப்பிட்டதுபோல 'மாமூல்ரேட்' உயரும். எதிர்க்கட்சிக்காரர்களும் பொது மக்களும் ஆட்சியாளரையும் காவல்துறையினரையும் அண்டி நிற்க வேண்டி வரும். அரசியல் விரோதிகள் மீது பழிவாங்கப் பயன்படும். இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் என்ன கேடு வந்தால் எம். ஜி. இராமச்திரனுக்கு என்ன? அவர் போடட்டும் புனிதன் வேடம். எவ்வளவு காலம் போட்டு விடப் போகிறார்? அதையும் தான் பார்ப்போமே!

தமிழ் நாட்டு யுலிசிஸ்!

தோப்பூர் திருவேங்கடம் எம். ஏ.

கீர்த்தி மிக்க கிரேக்கத்தின் அழியாப் புகழ் பெற்ற இலக்கியங்களில், ஓமர் தீட்டிய ஒடீஸிஸ், ஈடிணையற்ற உலக இலக்கியங்களில் ஒன்று. ஒடீஸிஸ் படித்தவர்கள் மனத்திரையில் மறையா ஓவியமாய் நின்று நிலைப்பவன்தான் யுலீசிஸ். ட்ரோஜோன்கள் படையெடுப்பைச் சுக்கு நூருக்க அக்கில்லஸ் இல்லையே என்று கிரேக்கம் ஏங்கிக்கொண்டிருந்தது. அறிஞர். அண்ணா இல்லையே, அரசியல் எத்தர்கள் இடுப்பொடிக்க என்று தமிழகம் ஏங்கிக்கொண்டிருந்த நிலையைப் போன்று கிரேக்கம் கலங்கிக்கொண்டிருந்தது. அப்போது, நாடு காக்க முன்வந்தவனே, கிரேக்க மாவீரன் யுலீசிஸ். ஆம், அவன் கிரேக்க நாட்டின் டாக்டர் கலைஞர் ஆவான். களம்பல கண்டு, பகைவர்களைக் கால் பிடரியிலடிபட ஓட்டி வெற்றி கண்ட விழுமிய வீரன்!

ட்ரோஜன்கள் கொட்டத்தை மட்டந்தட்ட அவன் முன்வந்தபோது, ஏளனத்தோடு ஏறிட்டுப்பார்த்தோரும் மாபெரும் படையினரை இவனாவது விரட்டுவதாவது என்று மனந்திறந்து மொழிந்தோரும் நல்ல.வல்ல ஒரு பெருவீரனை நாடு இழப்பதா என்று பரிதாபப்பட்டோரும் வியக்கும் வண்ணம் வெற்றியைப் படைத்தான், யுலீசிஸ்! எதிரிகளைத் தாக்குவதில் உடல் வலிமை, படை வலிமை மட்டும் போதாது, புத்தி கூர்மை வேண்டும் என்று எண்ணிச் செயல்படுவதில், யுலீசிஸ், நம் தானைத் தலைவன் கலைஞருக்கு இணையானவன் என்றால் மிகையாகாது. சூழ்ச்சியை சூழ்ச்சியால் முறியடிக்க வல்ல யுலீசிஸ் பெரும்படையுடைய ட்ரோஜன்களை வெல்ல உலகமே வியந்து போற்றும் அரியதொரு திட்டம் தீட்டினான், இதுவரை உலகினரே கண்டிருக்காத மாபெரும் மரக் குதிரை ஒன்றைச் செய்வித்தான். மரக் குதிரையா அது! கிரேக்கத்தையே தன்னுள் கொண்ட கீர்த்திக் குதிரை! 'ட்ரோஜன் குதிரை' என்று வரலாற்றுப் பேராசிரியர் புகழ்ந்துரைக்கும் புரவியினுள்ளே, கிரேக்கப்படையே அடங்கியிருந்தது. கிரேக்க வெற்றிக்கு, யுலீசிஸ் புகழுக்குக் கட்டியங் கூறிக்கொண்டு நின்றிருந்த அக்குதிரையை நகர்த்திச் செல்லவே எண்ணற்றோர் தேவைப்பட்டனர் என்றால், அதன் அமைப்பைப் பற்றிக் கூறத்தான் முடியுமா? அக்குதிரையின் ஒவ்வொரு பாகத்திலும் ஏராளமான வீரர்கள் பதுங்கிக் கிடந்தனர், பாயவிருக்கும் புலிகளைப் போன்று! ட்ரோஜன்களை மண்ணோடு மண்ணாக்க அமைக்கப்பட்ட அக் குதிரை ட்ராய் நகரின் மத்தியில்விடப் பட்டது. மரக்குதிரையை விட்டுவிட்டு வந்தது மட்டுமல்ல. இனி கிரேக்கம் ட்ரோஜன்களுடன் சண்டையிடாதென்று தெரிவித்தும் வந்தனர். சொல்ல வேண்டுமா, ரோஜன்கள் ஆனந்தத்தை? மரக் குதிரையைத் தடவிப் பார்த்து மகிழ்ந்தனர். மர்மத்தை அறியாமல்! கிரேக்கம் வீழ்ந்ததெனக் கெக்கலித்துக் களித்தனர். தாங்கள் போரிடாமல் பெற்ற வெற்றிக் கடையாளமான அம்மரக் குதிரையை மக்கள் கண்டு களிக்கும் காட்சிப் பொருளாக வைத்து விட்டனர். களிப்பில் மறந்து கண்ணயர்ந்து உறங்கும் அன்றிரவு அவர்கள் வளமான வாழ்வில் இடிவிழப் போவதை அறியாமல் உறங்கினர், நள்ளிரவு! மரக்குதிரையின் வயிறு பிளந்தது—மர்மக் குகையிலிருந்து வரும் புலிகளைப் போல் மாவீரர்கள் இறங்கினர், ட்ராய் நகரத்தைத் தீக்கிரையாக்கித், தினவெடுத்த தோள்களுக்கு வேலை கொடுத்துத் தங்கள் வாள்களின் ரத்தப் பசியை ட்ரோஜன்கள் ரத்தத்தால் தீர்த்தனர். கிரேக்கம் வென்றது—இவ்வெற்றியின் முழுமைக்குரியவனான யுலீசிஸ் போற்றப்பட்டான். இவ்விழுமிய போரைத்தான் ஓமர் அழகிய நடையில் 'ஒதீஸியஸ்' என்னும் உலகு புகழ்காவியமாகப் படைத்தான்.

இம்மாபெரு வீரன் யுலீசிஸ், ட்ரோஜன் வெற்றிக்குப் பின்னர் தன் தாயகமான இத்தாகா தீவுக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான். இத்தாகதீவு இலட்சிய வீரனின் எழுச்சி இதயத்திற்கு ஏற்ற தீவு அன்று, அவன் அங்கு பாதைகள் கண்டானே ஒழிய, படைகளைக் காணவில்லை அத்தீவின் மக்கள், பிறவிப் பயன் அறியாமல் உண்பதும். உறங்குவதுமாய் உள்ளனரே என்று உள்ளம் நொந்தான். நாகரிகத்தின் எல்லையை அறிய விழையாமல் அறியாமை இருளில்—அஞ்ஞானப் பிடியில் உள்ளனரே என்று துடித்தான். வாழ்க்கையில் தாங்கள் காணத்தக்க உயரிய பொருள்கள் எவை, தங்கள் கடமைகள் என்ன என்று உணராமல் இருக்கின்றனரே என்று உள்ளம் நொந்தான். தன் இல்லம் கூட ஆரவாரமற்ற—அமைதிச் சூழ்நிலையில் இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

குமுறும் எரிமலையெனக் கோபங் கொண்டு, பகைவரைப் பஞ்செனப் பறக்கடித்த வீரனென்றாலும், குடும்பத்தை மறந்து விடவில்லை. அவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றை இனிதுற நிறைவேற்றினான். தன்னாதிக்கத்தில் இருந்த நகரங்களின் ஆட்சியைக் காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளைச்செய்திருந்தான். தன்னுடன் இருந்ததன் வயோதிகதுணைவிக்குத்தேவையானவற்றைக் குறைவின்றி நிறைவேற்றி இருந்தான். தன் மகன் டெலிமாக்ஸைகுடும்பப் பொறுப்புடையவனாகவும், தனக்குப்பின் ஆளுந்திறமை மிக்கவனாகவும், ஆற்றல் மிக்க வீரனாகவும் ஆக்கியிருந்தான்.

எனவே, அவன் அங்கிருந்து ஆற்றவேண்டிய பணி எதுவும் இல்லை எனலாம். அவனோ சுறுசுறுப்பாகவே வாழ்ந்து பழக்கப்பட்டவன், நாட்டின் பல்வேறு பணிகளில்பங்கேற்றுப் புகழுற முடித்தவன், துன்பம் வந்துற்றபோதும் துவண்டதில்லை; இன்பம் கொண்டபோதும் இறுமாப்படைந்ததில்லை. பலரோடு இணைந்தும் போராடியிருக்கிறான்; தனித்திருந்தும்வென்றிருக்கிறான். அவன் அறிவுத்திறனாலும், ஆற்றலினாலும், அனுபவத்தினாலும் புகழ்மாலைகளைச் சூடிக்கொண்டவன். அவன் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்கள் மேலும் பல அனுபவங்கள் பெறத் தூண்டுகோலாக இருந்தன. அறிவு என்பது அள்ளக்குறையாததன்றோ? அதற்கு வளர்ச்சிதான் அளவுகோல்! அது அழியாத பேரூற்று! நாளுக்குநாள் ஊற்றின் பெருக்கம் அதிகமாகுமே ஒழிய, வற்றிவிடாது ஆதலால்தான், அவன் அறிவு அனுபவத்தால் விரிய, விரிய அவனி முழுவதும்சுற்றிவெற்றி பெறத் துடித்தான்.

யுலீசஸ் தன் நெருங்கிய நண்பர்களான சில கப்பலோட்டிகளான வீரர்களைச்சந்தித்தான். துறைமுக விளக்குகள் ஒளிவீசி, தன்னை அழைப்பதாகக் கூறினான். தன் கடந்த கால வீர நிகழ்ச்சிகளை விளக்

(10-ம் பக்கம் பார்க்க)

இந்திக்குப் 'பராக்கு'க் கூறும் பா. ரா.க்கள்!

"இந்தியைப் படித்தால் என்ன...குறைந்தாபோய் விடுவீர்கள்?" என்று கேட்கிறார் ஒரு மத்திய அமைச்சர். இப்படிக் கேட்கும் அந்த அமைச்சர் வடநாட்டைச் சேர்ந்த மொரார்ஜி தேசாய் ஆகவோ அல்லது ஜெகஜீவன்ராம் ஆகவோ இருந்தால், 'அது அவர்களுடைய வாடிக்கையான பேச்சு' எனக் கருதி விட்டுவிடலாம்.

ஆனால்—

இப்படிக் கேட்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் அமைச்சர்! தமிழர்களின் வாக்குகளைப் பெற்று மத்திய அமைச்சராக வீற்றிருப்பவர்!

அவர் வேறு யாருமல்லர்—

மதுலிமாயினால் 'மழுங்கலானமந்தபுத்திகொண்டவர்' என மதிப்பீடு செய்யப்பட்ட பா. இராமச்சந்திரன்தான்!

வடபுலத்து இந்தி ஏகாதிபத்தியவாதிகளிடம்தனக்கிருக்கும் 'விசுவாசத்தை'க் காட்டிக் கொள்ள மேலும் அவர் சொல்கிறார்.

"தமிழ்நாட்டிலிருக்கும் சில அரசியல்வாதிகள்தான் இந்தி எதிர்ப்பைத் தூண்டி விடுகிறார்கள்..." என்று!

அவர் யாரை மனத்தில் நினைத்துக் கொண்டு இவ்வாறு 'கரித்துக் கொட்டுகிறார்' என்பதும் நமக்குத் தெரியும்.

தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் மதிக்காத எந்த ஒரு அரசியல் தலைவரும், அவர் அகில இந்தியப் புகழ் பெற்றஅரசியல் தலைவராக இருந்தாலும் கூட—தமிழர்கள் மனதில் இடம்பெறஇயலாது;

இதை இங்கிருந்து சென்ற 'பா. ரா.'க்கள் உணரவில்லையென்றபோதும், அங்கிருக்கும் மதுலிமாயி போன்றவர்கள் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார்கள்.

1977—ஆம் ஆண்டில் பா. ரா.வுடன் சென்னைவந்த மதுலிமாயி, "நாம் காமராஜ் சிலைக்கு மட்டுமின்றிபெரியார் இராமசாமி, அறிஞர்அண்ணா ஆகியோர்சிலைகளுக்கும் மாலை அணிவிக்கவேண்டும். அதுதான் தமிழக மக்கள் மனதில் நமக்கு ஒரு நல்லிரக்க உணர்வை ஏற்படுத்தும்..." என்று சொல்லியிருக்கிறார்.

இதற்கு பா. ரா. பதிலளித்திருக்கிறார்:

"அப்படிச் செய்தால் என்னுடைய தொண்டர்கள் சினம் அடைவார்கள்" என்று.

பா. ரா வின் 'தமிழ்ப்பற்றுக்கும்' 'இனப்பற்றுக்கும்' இதைவிட வேறு 'அத்தாட்சி' வேண்டுமா?

'மழுங்கல்தனமான மந்தபுத்தி உடையவர் பா. ரா..." என்று சொன்னதோடு மதுலிமாயி விட்டுவிடவில்லை. பா. ரா. போன்றோரின் குறுகலான புத்திதான் தமிழகத்தில் ஜனதா வளராமல் இருப்பதற்குக் காரணம் என்றும் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஒரு வடவர், ஒரு தமிழர் மீது இவ்வாறு தாக்குதல் தொடுத்ததுகண்டு தமிழர்கள் வருந்தாமல் இருக்க முடியாது.

என்றாலும்—

பா. ரா.வின் பேச்சுக்களைக் கேட்கும்போது, அவர் குறித்து மதுலிமாயி மதிப்பீடு செய்தது முற்றிலும் சரி என்றே கருதவேண்டியிருக்கிறது.

அது என்ன தமிழ்?

சென்னை, அக். 2—தற்போதைய தமிழ் மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய தமிழைத் துரிதமாகத் தமிழ் நாடு அரசு அமல் நடத்தும் என்று கல்வி அமைச்சர் அரங்கநாயகம் கூறினார்.

அரசு அலுவல்கள், உத்தரவுகள். சுற்றறிக்கைகள், பாடப் புத்தகங்கள் ஆகியவற்றில் இந்தப் புதிய மொழி உபயோகிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார். இந்தப் புதிய தமிழைப் பின்பற்றுமாறு பத்திரிகைகளையும் கேட்டுக் கொண்டார்.

—'தினமணி' சென்னைப் பதிப்பு (3—10—78)

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து வாளொடு முன் பிறந்த மூத்த குடி தமிழ் என்று நாம் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்

அந்தத் தமிழைத்தான் நாம் இன்றளவும் தாய்மொழியாகவும் வழக்கு மொழியாகவும் கொண்டு வாழ்ந்து வருகிறோம்.

தமிழிலே எப்படியோ ஊடுருவி இடம் பெற்றுவிட்ட வடமொழிச் சொற்களையெல்லாம் களையெடுத்துத் தனித் தமிழ் கண்டார் மறைமலையடிகள். ஆனால் இப்போது—வெளிவந்துள்ள செய்தி.

நம்மை யெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

'தற்போதைய தமிழ் மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய தமிழைத் துரிதமாக 'அமல் நடத்தப் போகிறதாம் தமிழக அரசு!

அது என்ன தமிழ்? அதுதான் நமக்குப் புரியவில்லை!

'தமிழ் எழுத்திலே சீர்திருத்தம் செய்யப் போகிறோம்' என்று சொன்னால், அதை நம்மால் புரிந்துகொள்ள முடியும் தமிழையே மாற்றப் போகிறோம் என்றால் என்னபொருள்?

அதுவும்

'தற்போதைய தமிழிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய தமிழாம்!

அந்தப் புதிய தமிழை உருவாக்கியவர் யார்? எப்போது உருவாக்கப்பட்டது? எல்லாம் பூட்டகமாகவே உள்ளது,

திடீரென்று இப்படி ஒரு செய்தியை வெளியிட்டுத் தமிழ் மக்களைத் திடுக்கிடச் செய்திருக்கிறது தினமணி.

ஒரு மொழியைத் தனியொருவரோ வேறு சிலரோ கூடி உருவாக்கிவிட முடியுமா? அதுவும் 'பரம ரகசியமாக' உருவாக்கித் திடீரெனப் புழக்கத்திற்குக் கொண்டு வந்து விட முடியுமா?

உள்ளபடியே அமைச்சர்தான் இவ்வாறு கூறினாரா அல்லது, தினமணிதான் இவ்வாறு ஒரு செய்தியை உருவாக்கி வெளியிட்டிருக்கிறதா என்பது புரியவில்லை!

ஒருவேளை அமைச்சரின் அறிவிப்பை 'தினமணி' தனக்கே புரிய 'பாஷை'ப்படி இவ்வாறு வெளியிட்டுள்ளதோ என்றும் ஐயுற வேண்டியுள்ளது,

அந்தப் புதிய தமிழ் என்னதான் என்று பொறுத்திருந்து பார்ப்போமே!

பேராசிரியர் கட்டுரை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்ந்த — தீண்டப்படாத பிறவிகளாகத்தான் இருந்திருப்போம்! கதிரொளி காணாத இருட்டறையில் உள்ளதடா உலகம் —என்று புரட்சிக் கவிஞர் குறிப்பிட்டாரே - அந்த இருட்டறையில் — ஏதில் பிணந் தழியற்று — என்று வள்ளுவர் குறளில் காட்டிய உவமைக்கு இலக்கியமான உணர்வுக்கு மதிப்பற்ற ஒரு சமுதாய வாழ்வில் உழன்று கொண்டிருப்போம்.

சாதி வேற்றுமையால் உருவான உயர்வு தாழ்வு, தீண்டாமை — மத ஆதிக்கம், வைதீக முறைகளின் பிடிப்பு, சாஸ்திர சம்பிரதாய நம்பிக்கைகள், முன்னோர் வழக்கு; சமுதாயப் பழக்கம், இதிகாச —புராணக் கதைகளில் நம்பிக்கை, ஆணின் மேன்மை — பெண்ணின் அடிமைத்தனம், செல்வச்செருக்கு — வறுமை கொடுமை உழைப்புக்கு மதிப்பின்மை; அறிவும் முயற்சியும் அலட்சியப்படுத்தப்படல்; இப்படி எத்தனை எத்தனையோ ஆதிக்கங்கள் — புறக்கணிப்புகள் ஆகியவைபற்றி எண்ணிப் பார்க்கும் துணிவுகூடத் தமிழ் மக்களிடையே பிறந்திருக்காது —பெரியார்பிறக்காதிருந்திருந்தால்.

ஆம் — நமது எண்ணங்கள் — நம்பிக்கைகள் — செயல்கள் .. பழக்கங்கள் இவை எதைப் பற்றியும் எண்ணிப்பார்க்கக் கூட நமக்கு ஒரு தூண்டுதல் ஏற்பட்டிருக்காது — துணிவு பிறந்திருக்காது.

கோழையாக,மோழையாக எதைக்கண்டும் அஞ்சி, எதைக் கேட்டும் அடங்கி ஆமையாக ஊமையாக இருந்த மக்கள்— தமது கண்களைத் திறந்து — உண்மையைத் தேடிக்காணும் முயற்சிக்குத் தயாரானதுபெரியாரால்.

பேய்—பூதம்—பிசாசு என அஞ்சும் சிறுவர் மனம்—வயதினால் தெளிவதைப் போன்று கடவுள்— மதம் — படைப்பு என்பதைக் கேட்டு அஞ்சிய பெரியவர்களும் சிந்திக்க வழி செய்தவர் பெரியார்.

எலியாக—முயலாகஇருந்த மக்கள் புலியாகச் செயல்செயப் புறப்படுவதற்கு ஏதுவான 'உள்ளத்தை' உருவாக்கியவர் பெரியார்.

மனிதன் உயர்ந்தவன் — எல்லா உயிரினும் மேலான அறிவைப்பெற்றதால் - பகுத்தறிவைப் பெற்றதால் உயர்ந்தவன் —அந்த அறிவை அவன் அனைத்திலும் பயன்படுத்தி வாழவேண்டும். அதனை இழக்கு மனிதன் — தன்னை இழப்பவன் ஆவான், என்னும் தெளிவை நாம் உணரச்செய்தவர் பெரியார்.

காலமெல்லாம் பாடுபட்டு — உழைத்து — குருதிகொட்டி — இந்த உலகை நாம் வாழத் தக்கதாகச் செய்தவன் மனிதன். அதில் மேலும் அறிவால் முன்னேறுவதே மனிதன் கடமை என்று தெளியச் செய்தவர் பெரியார்.

உடலுக்கு ஒவ்வாத உணவை ஒதுக்குவதுபோல வாழ்க்கைக்குப் பயன்படாத எண்ணங்களை — அவற்றின் பிடிப்பை உதறி எறிய வேண்டும் என்று அறிவுறுத்தியவர் பெரியார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் — தமிழ் மக்களின் எண்ணத்தில் புதுமையைக் கலந்தவர் உண்டு; புதுப்புது இலக்கிய விருந்து படைத்தவர் உண்டு; வெற்றிகளைக் குவித்தவர் உண்டு;சீர்திருத்தத்தைச் செப்பியவர் உண்டு; ஆனால் பெரியாரைப்போல் — தமிழர்களின் எண்ண ஓட்டத்திலே ஒரு திருப்பத்தை — மாற்றத்தை — மறுமலர்ச்சியை — பழமையை ஒதுக்கும் ஆற்றலை —எதனையும்ஆராயும்துணிவை உருவாக்கிய இன்னொருவர் பிறந்ததில்லை,

அறம் அறிந்தவர்கள் — நியாயத்தை உணர்த்தியவர்கள் — நல்லெண்ணத்தை வளர்த்தவர்கள் — பொது நோக்கைப் போற்றியவர்கள் பலப்பலர். ஆனால் பழைய மதிப்பீடுகளையே மாற்றி புதிய மதிப்பீடுகள் பிறக்க வழி கோலியவர் பெரியார் அவர்கள்.

பழைய நகைகளைப்போன்ற எண்ணங்களின் அழுக்குப் போக்கியவர் பலர் — மெருகேற்றியவர் பலர்—அழித்துப் புதுவகையாகச் செய்தவர் சிலர் - ஆனால் அந்த நகைகள் தேவைதானா? நகையே இல்லாவிட்டால் என்ன என்று எண்ணிப்பார்க்க வைத்தவர் பெரியார்.

'உன்னையே நீ உணர்ந்து பார்' என்றார் சிந்தனைச்சிற்பி சாக்ரட்டீசு. தமிழன் - தன்னை உணர—தன்னைச் சூழ்ந்துள்ள நிலையை உணர—தன்னைப் பிடித்துள்ள நோயை உணர— தன்னை பிணித்துள்ள தளையை உணர, தன்னை முன்னேற ஒட்டாது தடுக்கும்தனதுதன்னம்பிக்கையற்ற தன்மையை உணர வழி செய்தார் பெரியார்.

பழம் பெருமைபேசி அதிலேயேமகிழ்ந்து, அதனாலேயே தாம் உயர்ந்தநிலையினர்போல் எண்ணிக்கொள்ளும் — அந்த மணலில் தலை புதைக்கும் (நெருப்புக்கோழி)மனப்பான்மையை மாற்றித் - தலையைத் தூக்கி உலகத்தை எட்டிப் பார்க்கச் செய்தவர் பெரியார்

ஆம் — அப்படிப்பட்ட தந்தைபெரியாரின்'தொண்டு' தமிழகத்தில் பூட்டப்பட்ட முதல் ஏர் ஆக அமைந்த காரணத்தால்தான் - அறிஞர் அண்ணாவின்இரண்டாவதுஏர் முன்னேற முடிந்தது—முன்னேற்றங் காணவும் முடிந்தது.

எனவேதான் பெரியார் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களால் 'எனது ஒரே தலைவர்' என்று போற்றப்பட்டார்.

தமிழர் சமுதாய வாழ்வின்
விடிவெள்ளியாக,
தமிழர் வரலாற்றில் ஒரு
சகாப்தமாக,
தமிழர் உள்ளத்தில் —
மறுமலர்ச்சி ஏற்படுத்திய
ஒரு சிந்தனைச் சிற்பியாக,
தமிழர் வாழ்வில் ஒரு மாற்
றத்தை உருவாக்கிய
சீர்திருத்தவாதியாக,
தமிழ் இனத்தவரின்
மானத்தின் காவலனாக
தமிழர் தம் —
அடிமைத்தளை அறுத்த

ஒப்பற்ற தலைவனாக தந்தை பெரியார் போற்றப் படுகிறார். ஆம்—அவரேதான் — தமிழக மக்களின் விழுப் புணர்ச்சிக்கு வித்திட்டவர்!

ஆம்! துறைதோறும் ஏற்பட்ட அந்த விழிப்புணர்ச்சி— மங்காமல் — மறையாமல் — எந்நாளும் நிலைக்க ஆவன செய்வதே இன்று அவரது நூற்றுண்டு விழாவைக் கொண்டாடும் நமக்குள்ள கடமையாகும்

'அறிவில் வயதில் முதியார்
— அவர்—என்றும்
வாய்மைப் போருக்கு
இளையார்' என்று

புரட்சிக் கவிஞரால் பாராட்டப்பட்ட பெரியார் அவர்களாலேதான் — இன்றைய 'தமிழன்' உருவாகி இருக்கின்றான்!—தமிழனாக உருவாகாத — உணர்ச்சி பெறாத தமிழர்களும் இருக்கின்றார் எனினும் —பெரியார் இல்லையேல் உணர்ச்சியுள்ள தமிழனே இருந்திருக்கமாட்டான் எனலாம்!

அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

(கவிப்பெருங்கோ முடியரசன்)

இதயமிலாத் தலைவர்; காஞ்சிச் செம்மல்
இதயத்தை இரவலெனப் பெற்று வந்தார்
உதயங்கள் இவர் மனதில் ஆவதுண்டா?
உதயத்துச் சூரியனே நெஞ்சில் உண்டு;
சதையில்லா உடலெனினும் அண்ணன் தந்த
சத்தெல்லாம் குருதிஎன ஆக்கிக் கொண்டார்
அதையுணர்ந்தே கலைஞர்தமை அண்ணா வாக்கி
அகமலர்ந்து வாழ்த்துகிறேன், வணங்குகின்றேன்!

சங்கங்கள் மூன்றமைத்துப் புலவர் வேந்தர்
சமமாக வீற்றிருந்து தமிழைக் காத்தே
எங்கெங்கும் புகழ்மணக்கத் திகழ்ந்த நாடு;
வணிகத்தைப் போர்த்திறத்தை எடுத்துக் காட்ட
வங்கங்கள் பல செலுத்தி வளர்ந்த நாடு!
வளமிக்க அரசியலைத் தெளிந்த நாடு
நங்கையவள் காவிரித்தாய் வளர்த்துவிட்ட
நாகரிகத் தொட்டிலென வாழ்ந்த நாடு.

எங்கெங்கோ திரிந்தவர்கள் இங்கு வந்தார்;
ஏமாந்த தமிழினத்தார் மனம்நெகிழ்ந்தார்;
அங்கங்கே அமர்ந்தவர்கள் துறைகள் தோறும்
ஆரியத்தின் கொள்கைகளைப் புகுத்திவிட்டார்;
தங்கங்கள் நிறமாற ஒளியும் மாறத்
தந்திரங்கள் மந்திரங்கள் பூசிவிட்டார்;
சிங்கங்கள் குள்ளநரிக் கடிமை யாகிச்
சீர்கெட்டு வாழ்ந்திடவே மாயை செய்தார்.

புகைபடிந்த ஓவியம்போல், சுவர்களெல்லாம்
புழுதிபடை மாளிகைபோல், கருமைகொண்ட
முகில்படர்ந்த முழுமதிபோல், அழுக்க டர்ந்து
மூடிய ஓர் பளிங்கினைப்போல், மண்ணுக்குள்ளே
புகவிழுந்த பொற்சிலைபோல், பனிபடிந்த
பொன்மலர்சூழ் சோலையைப்போல் தமிழர்நாடு
தகவிழந்து பொலிவுதரும் அழகிழந்து
தகதகக்கும் ஒளியிழந்து நின்ற தந்தோ!

தென்னாட்டை வந்தவரால் அடிமை யான
திருநாட்டைச் சீர்திருத்தி மீண்டும் சங்கப்
பொன்னாட்டை உருவாக்கச் சினந்தெழுந்த
போராட்டப் பெரியாரோர் பாட்டைக் கண்டார்;
தென்பூட்டும் ஈரோட்டார் தனித்து நின்றே
திருகுகள்ளி முட்புதர்கள் கல்முள் காளான்
மின்காட்டும் நச்சரவம் மலியும் காட்டைச்
செப்பனிட்டு வழியமைக்கப் பாடு பட்டார்.

வாஞ்சையினால் நம்பெரியார், செப்பனிட்டு
வழியமைக்கப் பாடுபடும் திறத்தைக்கண்டு
காஞ்சிக்கும் ஈரோட்டுப் பாச றைக்கும்
கற்றறிந்த நம்அண்ணா வழிய மைத்தார்;
தேன்சிதறும் பூஞ்சோலை பலவ மைத்தார்;
தெளிநீரைத் தருகிணறும் ஆக்கி வைத்தார்;
தீஞ்சுவைசேர் கனிமரங்கள் பலவும் வைத்தார்;
சேர்ந்திளைஞர் அணிவகுத்து நடந்து வந்தார்

உறுதிகொளும் நல்லிளைஞர் நடக்குங் காலை
உதவாத வவ்வால்கள் பறந்து வந்தே
உறுகனிகள் பலசுவைத்துப் பறக்கக் கண்டோம்;
ஒளிந்திருந்து திருடர்களும் சமயம் பார்த்துப்
பொருள் பலவும் திருடிக்கொண் டோடக்கண்டோம்
பொறுமையிலார் இடையிடையே தொல்லை தந்து
பொறுமவதும் கேட்டிருந்தோம்; எனினும் அண்ணன்
புது வழியில் நடப்பதைநாம் நிறுத்த வில்லை.

திருவிடத்தின் பெருமையினை மீண்டும் காணத்
தெளிந்துணர்ந்து சிந்தித்துக் காஞ்சி அண்ணன்
ஒருவழிதான் நமக்கெல்லாம் எடுத் துரை த்தார்;
உயர்தமிழும் தமிழினமும் உய்யவேண்டி
இருவழியைக் காட்டவில்லை; குழப்பவில்லை;
அனைத்திந்தி யாவென்று மழுப்பவில்லை,
வரும்வழியில் திசைமாறிப் போன மாந்தர்
வாயுளறல் சிரிப்புக்கே வழியைக்காட்டும்

கலைத்துறையில் திறம்மிக்க தலைவ ருண்டு
களங்காணும் போராட்டத் தலைவருண்டு
கலைத்துவிடும் அரசியலில் தந்தி ரங்கள்
காட்டுகிற தலைவருண்டு; துறைகள் தோறும்
மலைத்தெவரும் பாராட்டுந் தலைவ ருண்டு;
வானநெறி காட்டுகின்ற தலைவ ருண்டு
நிலைத்தமிழ் நாட்டுவழி காட்டித் தூய
நேர்வழியைக் காட்டத்தான் மறந்துபோனார்;

மடமையினைத் தகர்த்தெறிந்து, சிந்தித் தாய்ந்து
மதிதன்னை வளர்க்கும்வழி, நலமே சேர்க்கும்
கடமைவழி, கண்ணியமும் கட்டுப் பாடும்
கலந்தவழி, கருணை வழி, பண்பும் அன்பும்
உடையவழி உறுதிவழி மானங் காக்க
உற்றவழி. குறள்நூலின் சங்கநூலின்
இடைமருவும் தமிழர்வழி காஞ்சிக்கோமான்
எந்நாளும் எடுத்துரைக்க மறந்தா ரல்லர்.

துப்பாக்கி துணையென்று சொன்னதில்லை
துணிவுளமே துணையென்று மொழிந்து நின்றார்;
தப்பாக்கும் எவ்வழியும் நினைந்த தில்லை;
தன்மானம், தமிழுணர்வு. தன்னம் பிக்கை
வைப்பாக்கிக் கொள்வதுதான் தமிழி னத்தை
வாழ்விக்கும் வழியென்றார்; புகழ்ந்து சான்றோர்
செப்பாக்க வழியொன்றே சொல்லித்தந்தார்
சேப்பாக்க வழித்துயிலும் அறிஞர் கோமான்

அவ்வழியில் தமிழினத்தை அழைக்கவில்லை;
அருவருக்கும் வேற்றுமையை வளர்க் வில்லை;
நல்வழியே ஒன்றமைத்தான்; அதனைக்காட்டி
நம்பிவந்த தம்பியரை அழைத்துச் சென்றான்
கல்வழியோ முள்வழியோ காட்ட வில்லை
காட்டுவழி மேட்டுவழி காட்ட வில்லை

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

கடைசிக் கட்டம்

கலைஞர் கருணாநிதி

“கனம் நீதிபதி அவர்களே! கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் நான் கொலைகாரன் என்பது குற்றச்சாட்டு! நானும் அதை ஒத்துக்கொள்ளத்தான் போகிறேன். அற்கான தண்டனையையும் ஏற்கத்தயாராகவே இங்கு நிற்கிறேன். ஏற்க மறுத்தால்தான் என்ன! நீங்கள் எங்கே விடப்போகிறீர்கள்?

என் கழுத்தை இறுக்குவதற்காகத் தூக்குக்கயிறும், மூச்சடங்கிய என் உடலை மூடிக்கொள்வதற்காகச் சிறைச்சாலைக்குப்பக்கத்திலே ஒரு சிறு குழியும் தயாராக இருக்கும் என்பதை நான் அறியாமலில்லை. கொலைகாரன்—அதுவும் ஆசைநாயகியைக் கொலை செய்தவன்—சொந்தக் கணவனை ஏமாற்றிவிட்டு உள்ளத்திலேயே கள்ளக் காதலனுக்கு இடங்கொடுத்த பிரியமுள்ள பெண்ணொருத்தியைப்பிணமாக்கியவன்—என்றெல்லாம் ஊர் என்னைச் சபிக்கும்; உற்ருர் உறவினர் தூற்றுவர்; மண் மூடி மறைந்துவிடும் என் உடல் அவர்கள் கண்களுக்குக் கிடைக்காவிட்டாலும், டாக்டர் பாபு என்ற என்னுடைய பெயரின் மீது அவர்கள் காரி உமிழ்வார்கள் என்பதும் எனக்குத் தெரியும். என்னுடைய இந்த அற்பமானசரித்திரம் மற்றவர்களுக்காவது ஒரு பாடமாக இருக்கட்டும் என்பதற்காகக்கொலைக்கான காரணங்களை உங்களிடம் விளக்க விரும்புகிறேன்,

காரணங்களைக் கூறி விடுதலை பெறலாம் என்ற ஆசை எனக்குக் கிடையாது! ஏனெனில் நான் கூறும் காரணங்கள் எதுவுமே என்னை நிரபராதி என்று கூறும் சக்தி படைத்தது அல்ல. எனது கள்ளக்காதலி மஞ்சுளாவை நான்தான் கொன்றேன்.

வெறியில் கொல்லவில்லை. என்னை அறியாத நிலையில் கொன்றுவிட்டேன். நான் ஒரு டாக்டர். கோபாலபுரத்திலே குடியிருந்துகொண்டு டாக்டர் தொழில் நடத்தி வந்தேன். நான் குடியிருந்த வீடு பெரிய மாடி வீடு. மாடியிலேதான் வைத்தியசாலையும், எனது குடும்பமும், கீழேயுள்ள வீட்டில்தான் மஞ்சுளா தனது தந்தையுடன் வசித்து வந்தாள். என்மனைவி கோகிலாவுக்கும் மஞ்சுளாவுக்கும் மிகுந்த நட்பு! அந்த வீட்டுக்குக்குடிபோன சில நாட்களுக்குள்ளாகவே இருவரும் இணைபிரியாத் தோழிகளாகிவிட்டனர்.

என் துணைவி கோகிலா, பத்தினிகளின் பரம்பரையிலே வந்தவள். காலையிலே படுக்கையை விட்டெழும்போது என் கால்களைத் தொட்டு கும்பிடாமல் அறையைவிட்டு வெளியேறுவதில்லை. பகலானாலும், இரவானாலும், எவ்வளவு மணி நேரமானாலும் நான் சாப்பிட்ட பிறகே அவள் சாப்பிடுவாள். என் பெயர் பாபு என்பதற்காக—‘பா’ என்கிற முதல் எழுத்து வரும் எந்த வார்த்தைகளையும் அவள் உச்சரிக்கவே மாட்டாள். என் மீது அளவு கடந்த அன்பும், மரியாதையும் பக்தியும் கொண்டவள். கொஞ்சம் கர்நாடகமாயிருந்தாலும், கணவனைத் தெய்வமாகக் கொண்ட மனைவியாயிருக்கிருளே என்ற எண்ணம், அவள் மீது எனக்கு அளவில்லாத பாசத்தை உண்டாக்கியிருந்தது.

கீழ் வீட்டிலேயிருந்த மஞ்சுளா திருமணமானவள். அவள் கணவன் டில்லியிலே இருந்தான். கணவனுக்கும் மஞ்சுளாவுக்கும் ஏதோ சிறு தகராறு ஏற்பட்டு அது பெரிதாக முற்றி, கோபித்துக்கொண்டு, மஞ்சுளாதகப்பன் வீட்டுக்கு வந்திருந்தாள். மஞ்சுளா நல்ல அழகி. நாகரிக நாரீமணி. அவளது நீலக் குறுநயனங்கள்அனைவரையும் வசிகரிக்கும் தன்மை வாய்ந்தவை. நான் அடிக்கடி வெளியிலே சென்றுவிட்டுவீட்டுக்கு வரும்போது கீழ் வீட்டைக் கடந்துதான்மாடிக்குப்போக வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்கள் நானும்மஞ்சுளாவும் அடிக்கடி சந்திக்கும் நிலையை ஏற்படுத்தின. “நீ என்னைக் காதலிக்கிருயா?” என்று ஒரு பெண்ணிடம் கேட்டா தெரிந்து கொள்ள வேண்டும்?பார்த்தேதெரிந்து கொள்ளலாமே! அதுவும் மஞ்சுளாவின் அந்த விழி அசைவு என்இருதயத்தையே அடியோடு அசைத்துவிட்டது. ஒரு நாள் நான் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பினேன், கீழ் வீட்டு வாயிற்புறத்தில் மஞ்சுளா உட்கார்ந்திருந்தாள். எப்போதும் கோகிலாவும் மஞ்சுளாவும் அரட்டைஅடித்துக்கொண்டிருப்பார்கள்; அன்று கோகிலாவைக் காணவில்லை. நான் மஞ்சுளாவிடம் “அப்பா இல்லையா?” என்று கேட்டேன், “இல்லை, ஊருக்குப் போயிருக்கிருர்” என்று கூறிஞள்,

“கோகிலாகூடத் துணைக்கு வரவில்லையா?’ என்று கேட்டுக் கொண்டே நின்றேன்.

“இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தாள்—தலை வலிக்கிறது என்று தூங்கப் போய் விட்டாள்” என்று மஞ்சுளா கூச்சத்தோடு பதில் சொன்ஞள். நான் மாடியில் போய்ப் பார்த்தேன். கோகிலா நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தாள். மெதுவாக நடந்து கீழ் வீட்டுத் தாழ்வாரத்துக்கு வந்தேன்.

மஞ்சுளா, தெருக்கதவைத் தாழ் போட்டு விட்டுத் திரும்பியவள் என்னைப் பார்த்துத் திடுக்கிடவில்லை! தலையைக் குனிந்து கொண்டு நின்ருள். அருகே சென்றேன். அவள் அசையவில்லை. தொட்டேன்,

“கோகிலா தூங்கி விட்டாளா?” என்று கேட்டாள் ‘சம்மதம்’’ என்பதற்கு அறிகுறி இந்தக் கேள்வி!

பிறகு சமயம் கிடைத்த போதெல்லாம் நானும் மஞ்சுளாவும் காதல் கீதம் பாட ஆரம்பித்தோம். இந்த விஷயம் என் மனைவி கோகிலாவுக்குத் தெரிந்து விட்டது. அவள் என்னிடம் எவ்வளவோ கெஞ்சிஞள்; மன்ருடிஞள்; நானே மஞ்சுளாவின் மயக்கத்திலே அவள் புலம்பலை லட்சியம் செய்யாமலிருந்தேன். பற்பல அறிவுரைகள்கூறிக் கோகிலா என்னைத் தடுத்தாள்.

கோகிலாவுக்கும் மஞ்சுளாவுக்கும் விரோதம் வளர்ந்தது; எனக்கும் மஞ்சுளாவுக்கும் தொடர்பு வளர்ந்தது. கோகிலாவோடு நான் சரியாகவே பேசுவது கிடையாது. சதா சர்வ காலமும் மஞ்சுளாவைப் பற்றிய நினைவுகள். அவளைப் பற்றிய கனவுகள்!

அவளுடைய தகப்பஞர் எங்களின் சந்திப்புகளுக்கு ஒரு தடையாக இருந்தார். அந்தத் தடையை மீறுவது எங்களுக்கு ஒரு புது இன்பத்தையே அளித்தது;

கோகிலா ஒரு நாள் என்னிடம் வந்து, “நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன்.’’ என்று பயமுறுத்திஞள்.

நான், “தாராளமாகச் செய்து கொள், எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை’’ என்று கூறிவிட்டேன். கோகிலாவுக்கு வீட்டுக் குலதெய்வத்தின் அறையிலே முறையிட்டுக் கதறுவதே வேலையாகப் போய் விட்டது; தெய்வம் விட்ட வழியில் நடக்கட்டும் என்று அதன் காலில் விழுந்து கதறிஞள்.

★

ஒரு நாள் திடீரென்று டில்லியிலேயிருந்து மஞ்சுளாவின் கணவன் கோபால் வந்து விட்டான். மஞ்சுளாவைச் சமாதானப்படுத்தி அழைத்துச் செல்வதற்காகக் கோபாலின் சென்னை விஜயம் நடைபெற்றது. மஞ்சுளாவின் கோபம் தணியாத காரணத்தால், மாமஞரின் யோசனைப்படி கோபால் அங்கே ஒரு மாத காலம் தங்கவும் முடிவுசெய்து விட்டான்.

நானும் மஞ்சுளாவும் இப்போது வெகு கஷ்டப்பட்டுச் சந்தித்தோம். மஞ்சுளா டில்லிக்குப் போகக் கூடாது என்று நான் வேண்டினேன். அவளும் என்னைப் போலவே முடிவு செய்திருந்தாள்—மஞ்சுளா டில்லிக்குப் போய் விடுவாள் பிறகு தன் வாழ்வில் நிம்மதி ஏற்படும் என்று எண்ணியிருந்த கோகிலாவுக்கு, மஞ்சுளா டில்லிக்குப் போகப் போவதில்லை என்ற செய்தி இடியாக விழுந்தது! கோபாலோ எப்படியும் மனைவியைச் சமாதானப்படுத்தி விடலாம் என்ற தைரியத்தில் தங்கியிருந்தான்.

கோபாலுக்கும் எனக்கு[illegible] நட்பு ஏற்பட்டது. அவனுக்குத் தெரியாது, எனக்கும் அவன் மனைவிக்கும் நட்[illegible] என்பது! ஒரு மாதம்—இரண்டு மாதம்—மூன்று மாதம்—கோபால் தங்கி இருந்தான் சென்னையிலேயே! கடைசியாக கோபாலும் மஞ்சுளாவும் டில்லிக்குப் போகப் போகிருர்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. மஞ்சுளாவிடம் கேட்டேன். அவளும்‘ஆமாம்’ என்று தலையசைத்துவிட்டு ஓடி விட்டாள். அவள் என்னைக் கிண்டல் செய்வதற்காக அப்படிச் சொன்ஞள் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு ஒரே ஆத்திரம் பிறந்து விட்டது! மஞ்சுளா டில்லியிலே சென்று வாழ்வதா? நான் சென்னையில் அவளை நினைத்து ஏங்குவதா? என்று பெருமூச்சு விட்டேன்,

அவளைக் கொன்று யாருக்கும் பயன்படாமல் செய்து விட வேண்டுமென்று துடித்தேன். அன்று வெளியிலே சென்றிருந்த நான், ‘ரிவால்வார்’ சகிதம் வீட்டுக்குத் திரும்பினேன்.

மஞ்சுளாவைக் கொலை செய்து, அவள் டில்லிப் பயணத்தைத் தடுக்க வேண்டுமென்று முடிவு கட்டிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன்.

கீழ் வீட்டில் வேலைக்காரச் சிறுமி நின்றுகொண்டிருந்தாள். அவளிடம் “கோபால் எங்கே?’’ என்று கேட்டேன். “அவர் ஊருக்குப் போய் விட்டாராம்’’ என்று பதில் கூறுவிட்டு அவள் வேகமாகப் போய் விட்டாள். கீழ் வீட்டில் மஞ்சுளாவைத் தேடினேன்; காணவில்லை! சரி, அவளும் போய்விட்டாள் என்ற ஏமாற்றத்தோடு மாடிக்குப் போனேன். அங்கே என் மனைவி கோகிலாவைக் காணவில்லை. மேசை மீது ஒரு கடிதம் இருந்தது. பிரித்துப் பார்த்தேன்:

“அன்புள்ள பாபு!

உம்மிடமிருந்து விடுதலை பெறுகிறேன். என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீங்கள் செய்த தவறுகளுக்காக நானும் தவறு செய்வதா என்று எண்ணினேன். இது முறையல்ல என்று உலகம் சொல்லும்; அறிவாளிகள் சொல்லுவார்கள்; ஆஞல் உம்மைப் போன்றவர்கள் சீர்திருந்தி நடக்க, என் ஒருத்தியின் முடிவு ஒரு பாடமாக இருக்கட்டும். உமது உள்ளங் கவர்ந்த பொருளை உம்மிடம் விட்டுச் செல்லுகிறேன். இனி என் வாழ்க்கை கோபாலுடன் டில்லியில் நடைபெறும். நமஸ்காரம்.

உமது மனைவி

‘கோகிலா’

யார்; கோகிலாவா? என் மனைவி கோகிலாவா? அவள் கோபாலுடன் போய்விட்டாளா? என்று அலறினேன். என்னையே நான் மறந்தேன். நிலைதடுமாறி நின்றேன். அப்போது, என் எதிரே மஞ்சுளா வந்திருக்கிருள். எனக்குச் சரியாகக் கண் தெரியவில்லை. மஞ்சுளா எனக்குக் கோகிலா போலத் தோன்றிஞள். இமைப்பதற்குள் ரிவால்வாரை ஓங்கினேன், சுட்டேன். சுட்டேன்—சுட்டுக்கொண்டேயிருந்தேன்! வெறி அடங்கியது. பிறகுதான் மஞ்சுளாவைக் கொன்றுவிட்டதாக உணர்ந்தேன். கைது செய்யப்பட்டேன்,இப்போது இந்தக் கூண்டிலே நிற்கிறேன்.’’

—[illegible]ன்று குற்றவாளி தன்னு[illegible]ய உரையை முடித்தான்.

நீதிபதி கேட்டார்;

“கொலையாளி என்பதை ஒப்புக்கொள்கிருய் அல்லவா?’’ என்று!

“ஆமாம்; நான் கொலைகாரன்தான், கொலைகாரன்தான்!’’

என்று டாக்டர் பாபு முகத்திலே பலமுறை அறைந்து கொண்டார். அப்போது அவரது மீசை கீழே விழுந்தது! டாக்டர்பாபு அந்தமீசையை எடுத்து அவசரமாக ஒட்டிக் கொண்டார்.

கோர்ட்காட்சியைப்பார்த்துக்கொண்டிருந்த மக்கள் சிரித்து விட்டனர். வக்கீல்களும் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தனர்.

நீதிபதி, கீழே ஆத்திரத்தோடு இறங்கிவந்து குற்றவாளியைப் பார்த்து,

“உனக்கு இப்போதே தண்டனை விதிக்கிறேன்.அலட்சிய சுபாவத்தோடு, மீசையைக் கூடச் சரியாக ஒட்டிக்கொள்ளாமல், ஆயிரக்கணக்கான மக்களுக்கு நேராக, நடிப்பதற்கு வந்து விட்ட நீ, இந்த நாடகக் கம்பெனிக்கே தகுதியில்லை! இப்போதே இந்தக் கம்பெனியிலிருந்து உன்னை டிஸ்மிஸ் செய்கிறேன். மேக்கப்பை அழித்துவிட்டு வெளியேறு!’’ என்று அதிகாரத்தோடு கத்திஞர்! திரை விழுந்தது.

டாக்டர் பாபு வேஷம் போட்ட நடிகர் எவ்வளவு தான் கெஞ்சியுங்கூட அவருக்கு நீதிபதி வேஷம் போட்ட கம்பெனி முதலாளியிடமிருந்து மன்னிப்புக் கிடைக்கவில்லை.

★

டில்லியில் நான் ஓர் அந்நியன்!

(2)

வி. கே. மாதவன்குட்டி

அரசியலமைப்பில் இந்தி இடம் பெறுவதற்கு முன்னர், தமிழகம் உட்படத் தென்னக மக்களின் இதயங்களில் அது இடம் பெற்றிருந்தது. ஆனால் அரசியலமைப்புச் செயலுக்கு வந்து இன்றைய ஆட்சியாளர்கள் அதனை அமுல்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டதும், இந்தி மொழி குறித்துக் கடும் வாக்குவாதங்கள் தோன்றலாயின. இதற்குக் காரணம், கடந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, ஆட்சியாளர்கள், இம்மொழியை ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்குரிய சாதனமாகக் கருதாமல் அதனை ஆதிக்கம்செலுத்துவதற்குரிய ஒரு கருவியாகக் கருதுவதே யாகும்.

தென்னக முதலமைச்சர்களோ அல்லது இந்தி பேசாத மாநிலங்களின் முதலமைச்சர்களோ கூடி, இந்தித் திணிப்புக் குறித்து விவாதிக்கலாம். இந்தி ஆதரவாளர்கள், இந்தியைத் திணிப்பதில் அக்கறை காட்டவில்லை என்பதையும் ஆட்சி செலுத்துவதில்தான் அவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம்மறந்துவிடலாகாது. இந்தி அவர்களுக்கு இதற்குக் கைவந்த கருவியாகப் பயன்படுகிறது.

நாட்டின் ஒற்றுமையினையும், தேசியஒருமைப்பாட்டையும் கவனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என அவர்கள் கூறலாம். தென்னக மக்களும் நாட்டின் பிறபகுதிகளிலுள்ளவர்களும் இந்தியைத் திறம்படக் கையாள முடியும். (அது நிரூபிக்கப்பட்டிருக்கிறது). ஆனால், நாம் இந்தியைக் கற்றுக்கொண்டு, அவர்களோடு இணைந்திருப்பதை வடவர் விரும்பவில்லை. அவர்கள் நம்மைப் பின்னுக்குத் தள்ளி "ஒதுக்கு நிலை"யில் வைத்திருக்கவே விரும்புகிறார்கள். நாம் இருக்குமிடத்திலேயே இருக்கவேண்டும்; ஏகாதிபத்திய அதிகாரக்கருவியாக இந்தியைப் பயன்படுத்தி நம் மீது அவர்கள் ஆட்சி செலுத்த வேண்டும். இதுதான் அவர்களுடைய உண்மையான எண்ணம். இந்தி பேசப்படாத பகுதிகளில் இந்தியை வளர்ப்பதற்கும், இந்தி பேசப்படும் பகுதிகளில் இந்தியைவளர்ப்பதற்கும் செலவிடப்பட்ட தொகையை ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த விசித்திரமான உண்மைபுலப்படுவதைக்காணலாம்.

தென்னாட்டிலிருந்து வெளியாகும் தேசிய நாளிதழ் ஒன்றுக்காக நான் டில்லியில் பணியாற்றி வருகிறேன். இந்நாளிதழின் ஆசிரியர், சுதந்திரப் போராட்டத்தின்போதுகைது செய்யப்பட்டார். இன்னொரு ஆசிரியர் நேத்தாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில்பணி புரிந்தவர். காந்தியடிகள் போன்ற பல தேசியத் தலைவர்கள் இந்நாளிதழ் அலுவலகத்திற்கு வருகை புரிந்திருக்கிறார்கள். இந்நாளிதழ், தனது தேசிய உணர்வின் ஒரு பகுதியாக, இந்தி மொழியில் மாதமிருமுறை இதழ் ஒன்றைத் தொடங்கியது

தென்னாட்டில் இந்திமொழியைப் பரப்புதற்காகவே இந்த இதழ் தொடங்கப்பட்டது. தேசியக் குறிக்கோளுக்காக 12ஆண்டுகள்பாடுபட்ட பிறகு, அந்த இதழை நிறுத்திவிடநேர்ந்தது. மத்தியஅரசை அணுகியபோது, ஒரு மானியம் வழங்க உறுதியளித்தது. ஆனால், சந்தாவாகவோ விளம்பரமாகவோ அரசின் ஆதரவு எதுவும் கிடைக்கவில்லை. மத்திய இந்திமொழி இயக்கத்திற்கு ஒருதென்னாட்டவர்தலைமைதாங்கியபோது ஒரு சில பிரதிகளை அந்த இயக்கம் வாங்கியது. ஆனால் அவர்ஓய்வு பெற்றதும்அந்தச் சந்தாக்கள்நிறுத்தப்பட்டன.

தென்னாட்டில் இந்தியைப் பரப்புவதில் வடநாட்டவர் எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே இதைக் குறிப்பிட்டேன்.

அனாவசியமாக ஆர்வமும் விசுவாசமும் கொண்டிருந்ததற்காக இந்த இந்தி இதழ் சாகடிக்கப்பட்டது. அது இறந்துபோனது எனக்கு அத்திரமூட்டினாலும் ஒருவகையில் மகிழ்ச்சிதான்.

இந்தி மொழி பேசப்படாத மாநிலங்கள் அணி சேர்வதை ஆட்சியாளர்கள் விரும்புவார்கள் என எனக்குத் தோன்றவில்லை. தென்னக மாநில முதலமைச்சர்கள் இப்பொழுதுதான் ஒன்று கூடி இந்தித் திணிப்பு குறித்து விவாதித்துள்ள போதிலும், மொழிக்கொள்கையில் இனி மேல் அவக்கள் அணி சேர்ந்து விடாதபடி ஆட்சியாளர்கள் ஏற்கனவே பிளவை ஏற்படுத்தி விட்டார்கள். இது பத்தாண்டுகளுக்கு முன்பே நேர்ந்துவிட்டது. ஆட்சி மொழிக்கொள்கை என்ற பெயரில் வகுக்கப்பட்டுள்ள விதிகள் இதைப் புலப்படுத்தும். இந்த விதிகளுள் ஒன்று "தமிழ்நாடு விரும்புகிறவரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி" மொழியாக நீடிக்கும் எனக் கூறியது. தமிழ்நாட்டின் மீதுள்ள அன்பினால் இவ்விதம் கூறவில்லை. அந்த மாநிலத்திலிருந்து அச்சுறுத்தல் எழக்கூடும் என்ற பயத்தினாலேயே இந்த விதி சேர்க்கப்பட்டது. இந்தி பேசப்படாத மாநிலங்களைத் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும்படி செய்வதற்காகவும் இந்த விதி செய்யப்பட்டுள்ளது. "கடைந்தெடுத்த" பிரித்தாளும்" மனப்போக்கு இது!

இங்கு, சில மாதங்களுக்கு

[தொடர்ச்சி 11-ம் பக்கம்)

அண்ணா வழியில் அயராது உழைப்போம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்வழியும் சொன்னதில்லை; யாரும் ஏற்றுக்
கொள்வழியே உரைத்திருந்தார் தலைவர் கோமான்

கருப்புக்கு மறுப்புரைத்துப் பகைமை பூண்ட
கருத்தினரும் வந்தவழி, குழப்பம் செய்து
வெறுப்புற்றுத் திரிந்தவரும் மனந்தி ருந்தி
விழைந்தவழி, முதல்எதிரி என்று சொல்லிச்
செருக்குற்று நின்றவரும் முதலில் வந்து
சேர்ந்தவழி, செம்மைவழி எங்கள் அண்ணன்
உருக்கொடுத்துத் தந்தவழி பெரியார் பட்ட
உழைப்பாலே உருவான வழியே யாகும்.

அழகுநடைத் தமிழ்எழுதிப் புதிய பாங்கில்
அணிவகுத்து நடப்பதற்கு வழிய மைத்தார்
பழகுதமிழ் நடைபேசிப் பாரோர் போற்றும்
படையொன்று நடைபோட வழியமைத்தார்;
மழலைமொழி நடையினரும் கற்றுக் கற்று
மாவீரர் போல்நடந்தார் வெற்றிகண்டார்
விழலனைய மனிதர்களும் எழுதிப் பேசி
வீறுபெறும் நடைபெற்றார் வாழ்வும் பெற்றார்,

தூற்றாதீர் பிறர்பழியை; மேடை ஏறித்
தொடுக்காதீர் வசைமொழியை, காசுக்காக
மாற்றாதீர் தமிழ்ப்பண்பை; கருத்தைமட்டும்
மறுத்துரைப்பீர்; தனிஒருவர் பழித்தல் வேண்டா!
மாற்றாரின் தோட்டத்து மல்லிகைக்கும்
மணமுண்டு தெரிந்ததனை நுகர்க' என்று
சாற்றி ஒரு பண்புவழி காட்டி நின்று
தமிழினத்தை வளர்க்கும் வழி உணர்த்திநின்றார்

புரட்சிவழி எனச்சொல்லி உணர்ச்சி யூட்டிப்
புன்மைவழி அமைக்கவில்லை; மக்கள் நெஞ்சில்
மருட்சிபெறச் செய்யவில்லை; பகைத்தோர் கூட
மனத்துக்குள் ஏற்கின்ற வழியே சொன்னார்;
கருத்துவழி, அறிவுவழிப் புரட்சி செய்தார்;
களப்புரட்சி கொலைப்புரட்சி செய்தா ரல்லர்;
தரத்திலுயர் புரட்சிவழி, தன்னைத் தானே
தருகின்ற அறத்துவழி ஒன்றே கண்டார்.

தனக்கென்று வழியமைத்துக் கொள்ளவில்லை;
தமிழினத்தின் வாழ்வுக்கே வழி யமைத்தார்
எனக்கென்றவ் வழியொன்றே தேர்ந்து கொண்டே
இன்றுவரை பிறழாமல் ஒழுகு கின்றேன்
குணக்குன்றை ஒருநாளும் பழித்த தில்லை;
குறுக்குவழி சென்றதில்லை; குழப்பம் செய்யப்
பிணக்கொன்றும் விளைக்கவில்லை; அதனால் துன்பம்
பெற்றதுண்டு; வாழ்க்கைவளம் பெற்றதில்லை

வளமற்ற நிலைகண்டோர் பரிந்துபேசி
வாழவழி பலவுண்டு வருக என்றார்;
உளமற்ற நிலைஎனக்கு வந்த தில்லை;
உறுதியுளேன் ஒருபொழுதும் வழுவமாட்டேன்
தளர்வுற்ற எனக்கென்ன கிடைக்கும் என்று
தரங்கெட்டுப் பிறவழியில் சென்றதில்லை;
வளமற்று வாழ்ந்தாலும் அண்ணன் சொன்ன
வழிஒன்றே எனதுவழி; தொடர்ந்து செல்வேன்.

ஒருவழியில் நிலைநின்று நடப்பீர் என்றே
உணர்த்துதல்போல் ஒருவிரலைச் சுட்டிக்காட்டிப்
பெருமையுற நிற்கின்ற சிலையின்முன்னே
பேதையர்போல் துணிகொண்டு முகத்தை மூடி
வருமனித உருவங்கள் கண்டதுண்டு;
வாராத நோய்வந்து வாடிநின்று
மருகுகிற வேலையிலும் வைதா ருண்டு;
மாவலியால் பொறுமைவழி காட்டி நின்றார்.

மண்மகளே உனைக்காக்க முதல்வர் ஆனார்;
மதராசென் றிருந்த உனைத் தமிழ்நாடாக்கி
அண்ணனவர் அறுபதுகல் வழிநடந்தார்
அவரைத்தான் உன் வயிற்றுள் அடக்கிக்
கொண்டாய்
கண்மணிபோல் உனைக்காத்தார் அவர்க்கோ இந்தக்
கைம்மாறு செய்தனை நீ? எங்கள் நெஞ்சில்
புண்மருவச் செய்தனையே; கோமான் கண்ட
புதுவழியை என்செய்ய இயலும் உன்னால்

அண்ணாவின் வழியில்தான் செல்லுகின்றோம்;
அல்லல்பல வந்தாலும் அயரமாட்டோம்;
புண்ணாகப் பழிமொழிகள் வீசும் போதும்
பொழுதெல்லாம் சோதனைகள் வந்தபோதும்
மண்ணாளும் உரிமையினைக் கலைத்தபோதும்
மனைமக்கள் தமக்கிடர்கள் விளைத்தபோதும்
எண்ணாத சிறைக்கூடம் வதைத்தபோதும்
எந்நாளும் உழைத்திருப்போம் வெற்றி கொள்வோம்

அடிவயிற்றில் எமைமிதித்துக் கொன்றபோதும்
அவர்காட்டும் வழியில்தான் செல்வோம் நாங்கள்
அடிபட்டு மிதிபட்டுத் துயர்கள் உற்றும்
அயராமல் உழைத்திடுவோம்; இரண்டு வண்ணக்
கொடிகட்டி அதன்நிழலில் தொடர்ந்து நின்று
குறிக்கோளை நோக்கித்தான் பயணம் செய்வோம்
மடியட்டும் எமதுயிர்கள் அஞ்சமாட்டோம்
மறிக்கட்டும் எமைப்பகைகள் தொலைத்துச்
செல்வோம்

தம்பிகரு ணாநிதியும் எம்மோ டுள்ளார்
தலைமகனார் வழியில்தான் செல்லுகின்றார்
வெம்பினமும் புலிமறவர் இங்கே உள்ளார்
வீரமகன் வழியில்தான் செல்லுகின்றோம்;
கும்பியினை வளர்ப்பவர்கள் குரைத்துவிட்டால்
கொள்கைவழி தொடராமல் நின்றுபோவோம்?
நம்பிவரும் நல்வர்கள் இங்கே உள்ளார்
நம் அண்ணன் அமைத்தவழி தொடர்ந்து செல்வோம்

அண்ணாவைப் போற்றுவது கடமை என்றால்
அவர்தம்பி கலைஞரையும் போற்ற வேண்டும்
அண்ணாவைத் தலைவரென ஏற்றுக்கொண்டால்
அவர்தம்பி கலைஞரையும் ஏற்கவேண்டும்
அண்ணாவின் சொல்லெல்லாம் மதிப்பதென்றால்
அவர்தம்பி கலைஞர்மொழி மதிக்கவேண்டும்;
அண்ணாவின் கொள்கைவழி நடப்பதென்றால்
அவர்தம்பி கலைஞர்வழி நடக்கவேண்டும்.

[17–9–78 அன்று கலைஞர் தலைமையில்
நடந்த கவியரங்கில் பாடியது]

கவர்னர் இப்படி அவமதிக்கலாமா?

டி. ஆர். பாலு

இந்தியக்குடியரசுத்தலைவர் திரு. நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் கிண்டி கவர்னர் மாளிகையில் தங்கியிருந்த போது அவருக்குப் பிடித்தமான அசைவ உணவை உண்ண விரும்பினார். ஆனால் கவர்னர் பட்வாரி அவ்வுணவை வழங்க மறுத்ததோடு வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட உணவைப் பரிமாறத் தமது மாளிகையின் தட்டுகளைக் கூடக் கொடுக்க மறுத்துவிட்டார்,

— இது செய்தி

மேலே காணும் இந்த வரிகளைப் பார்க்கும்போது திரு. பட்வாரி அவர்கள் தீவிரமான காந்தீய வாதியாகச் செயல்பட்டிருக்கிறார்...இதில் என்ன தவறு என்று எண்ணக்கூடும். அதே சமயம் –

என்ன இருந்தாலும் ஒரு குடியரசுத் தலைவரை, இந்த நாட்டு முதல் குடிமகனை, ஆளுநர் ஒருவர் இப்படி அவமதிக்கலாமா? என்று எண்ணுவதிலும் நியாயம் உள்ளது.

"நான் ஆந்திர முதலமைச்சராக இருந்தபோதும் சரி, இப்போது குடியரசுத்தலைவராக இருக்கும்போதும் சரி எனது மகனை என் பக்கத்தில் வைத்துக்கொண்டு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ய அனுமதித்ததில்லை" என்று சஞ்சீவரெட்டி கூறியது, மொரார்ஜியின் மகன் காந்தி தேசாயின் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது என்றும் ஆகவே நேரடியாகத் தலைமையமைச்சரைக் குடியரசுத் தலைவர் சந்திக்கு இழுத்துவிட்டார் என்ற கோபம் மொரார்ஜியின் அணியைச் சார்ந்த பட்வாரிக்கு ஏற்பட்டிருப்பதால் ஒருவேளை இப்படி நடந்து கொண்டிருப்பாரோ என்றும் அரசியல் நோக்கர்கள் கருதவும் இடம் உள்ளது

சாலப்பள்ளி ஜமீன்தாரின் மூவாயிரம் ஏக்கர் நிலத்திற்கு ஆந்திர அரசின் நில உச்சவரம்புச் சட்டம் விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்து அந்த மாநிலத்தில்தொடர்ந்து இருந்த இரண்டு முதலமைச்சர்களுக்கும் தமது கைப்படக் கடிதம் எழுதி, ஒரு மாநில அரசின் விருப்பத்திற்கும் சட்டத்திற்கும் எதிராகச் செயல்பட்டுத் தனக்கு வேண்டிய பணக்காரர்களுக்குப் பக்கபலமாகப் பணியாற்றிய இந்த நாட்டுப் பிரதமர் 'காந்தீய வாதி' எனப் போற்றப்படுகிறார்.

இவர்கள் நடத்துகிற அரசு ஏழைகள் அரசு, மக்கள் அரசு சோஷலிச அரசு இதற்கென்று ஒரு பிரதமர்; அந்தப் பிரதமருக்குத் துதிபாடுகின்ற மாநில கவர்னர்கள்; மக்கள் வரிப்பணத்தில் விருந்துகள்; விழாக்கள்! அந்த விருந்துகளை அனுபவிக்க சைவர்கள் மட்டுமே வரலாம்; அசைவர்களுக்கு அனுமதியில்லை; இது நாட்டு நடப்பு. தமிழக கவர்னர் குடியரசுத்தலைவர் சஞ்சீவ ரெட்டியிடம் இவ்வளவு கெடுபிடியாக நடந்திருக்க வேண்டியதில்லை: குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஒரு நாட்டின் மிக உயர்ந்த பொறுப்பில் உள்ள அதே குடியரசுத்தலைவரிடம் இப்படி நடந்துகொண்டது மிகவும் கண்டிக்கத்தக்கது. அநாகரீகமானது.

அரசு விருந்தினர்களை உபசரிப்பதும். வழியனுப்புவதும் கவர்னருடைய முக்கிய வேலைகளில் ஒன்று. மக்களின் வரிப்பணத்தில் இத்தொகை செலவிடப்படுகிறது, ஆனால் அந்தச் செலவு சைவ உணவிற்குத்தான் செலவிடப்படவேண்டும் என்றோ அல்லது காந்தீய நெறிக்கு எதிரான அசைவ உணவிற்குச் செலவிடப்படக்கூடாது என்றோ மக்கள் கட்டளையிடவில்லை. அல்லது மக்கள் பணத்தில் பராமரிக்கப்படும் ராஜ்பவனத்தில் அசைவர்கள் தங்குவது கூடாது என்றோ அல்லது அங்குள்ள பொருட்களை அசைவர்கள் பயன்படுத்தக்கூடாது என்றோ அரசியல் சட்டம் சொல்லவில்லை. அரசு விருந்தினர்கள் முறைப்படி உபசரிக்கப்பட்டு. வழியனுப்பப்படுவதற்குத்தான் அவ்வளவு பெரிய இடம்: பங்களா. வேறு வசதிகள் எல்லாம்.

இதை உணராமல் அசைவ உணவு உண்பவர்களை நட்சத்திர ஒட்டலில் தங்கவைத்து இரட்டிப்புச் செலவு செய்வதும் குடிமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற குடியரசுத் தலைவர் பயன்படுத்த ராஜ்பவனத்துத் தட்டுக்களைக் கூடத் தர மறுத்து அவரை அவமதித்திருப்பதும் பட்வாரிக்கு அழகல்ல! உண்மையில் இது தென்னகத்தின் தலைவர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அவமானமாகத்தான் நாம் கருதவேண்டும்.

அவர் உண்மையில் காந்தியவாதியாக இருந்தால் இவ்வளவு பெரிய அரசு மாளிகையைப் பயன்படுத்துவதிலிருந்து தம்மைத் தவிர்த்துக் கொண்டிருக்க வேண்டும், ஆயிரக் கணக்கில் தாம் பெறுகிற ஊதியத்தைக் குறைத்துக் கொண்டிருக்கவேண்டும். பளபளக்கும் கார்களில் பவனி வருவதை நிறுத்திக்கொண்டு சாதாரணமான அரசுப் பேருந்துகளில் பயணம்செய்ய வேண்டும். முடிந்தால் காந்திய வழியில் நடந்தே செல்ல வேண்டும். ராஜ்பவனத்துப்பணியாளர்களைக் கோட்டைக்கு அனுப்பிவிட்டுத் தமதுவீட்டுப் பிள்ளைகளைக்கொண்டு தமது அன்றாடப் பணிகளைச் செய்து கொள்ளவேண்டும். வேலையில்லாத நேரத்தில் கைராட்டை கொண்டு நூல் நூற்றுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். அதுதானே உண்மையான காந்தியவாதிக்கு அழகு! எல்லாவற்றிற்கும் மேலாக மாலை நேரத்தில் ஒளிந்து கொண்டு மது அருந்தும் மந்திரிகளின் மது பர்மிட்டைரத்து செய்துவிட்டு "வைஷ்ணவ ஜபதே" பஜனையில் அவர்களையும் இணைத்துக்கொண்டு 'ராமராஜ்யம்' நடத்தினால் உண்மையான காந்தியவாதி என்று ஊர் புகழும்!

குடியரசுத் தலைவருக்குப் பாடம் புகட்ட நினைத்த பட்வாரி அவர்கள் குறைந்த பட்சம் தமது அருகில் உள்ள முதலமைச்சர் திரு. எம். ஜி. இ ரா ம ச் ச ந் தி ர னை அழைத்து, புலால் உண்ணாமை. அதிகாரத்தைப் போதித்துக் காந்திய நெறியைக் கடைபிடிக்கச் சொல்வாரா?

தென்னகத்தின் தாழ்வாரத்தில் பிறந்து வளர்ந்து தேசியப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொண்டு இன்றைய மக்களின் அரசுத் தலைவராக வீற்றிருக்கும் குடியரசுத்தலைவரை அவமதித்த பட்வாரி அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்னகத்து மக்களாக இருந்தாலும் சரி அந்த மக்களின் தலைவர்களாக இருந்தாலும் சரி வடவர்களுக்கு என்றைக்கும் சளைத்தவர்களல்லர்!

அது காந்திய நெறியைக் கடைபிடிப்பதாக இருந்தாலும் சரி! நாட்டு ஒற்றுமையைப் பேணுவதாக இருந்தாலும் சரி! அல்லது நாடு காக்க போருக்குப் புறப்படுவதாக இருந்தாலும் சரி.

'தீண்டத் தகாதவர்கள் இவர்கள்' என்று புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தைப் பார்த்து 'அரிசன்' என்றார் காந்தியடிகள்,

ஆம்! 'அரிசன்' என்றால் கடவுளின் குழந்தை என்று பொருள். அந்தக் கடவுளின் குழந்தைகள் மனிதர்களின் 'அடிமைகளாக இருக்கின்ற நிலையை மாற்றிஅமைப்போம் வாரீர்!' என்று அண்ணா அழைத்த நேரத்தில் 'என் மகனுக்கு மணமகளாய், என் மருமகளாய் ஒரு அரிசனப் பெண்ணை ஏற்றம் பெறச் செய்கிறேன் அண்ணா!' என்று வாழ்வளித்த தங்கத் தலைவன் வேறுயாருமில்லை எங்கள் தன்னிகரில்லாத் தமிழர் தலைவன் கலைஞர் தான்!

அவர் காந்தியவாதியில்லையா? அரிசனப் பெண்களைப் பக்கத்திலே உட்காரவைத்து உணவு உட்கொண்டால் மட்டும் அரிசனங்கள் ஏற்றம் பெற்றுவிடுவார்கள் என்று எண்ணுவதைவிட ஆக்கபூர்வமாகச் செயல்படுத்திக் காட்ட வேண்டும். அப்படிச் செயல்படுத்திக் காட்டியவர்கள் தென்னகத்தவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்!

மதுவிலக்கைச் செயல்படுத்த வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பிய போது உடனடியாகத் தன் தோட்டத்தில் இருந்த கள் தருகின்ற ஆயிரக்கணக்கான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தி மது அரக்கனை ஒழிக்க வழிவகுத்தவர் வேறு யாருமில்லை! எங்கள் இனத் தலைவர் தந்தை பெரியார்தான்.

ஆகவே இனிமேலாவது பட்வாரி போன்றவர்கள் தென்னகத்துத் தலைவர்களை மூன்றாந்தர நிலையில் தள்ளுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நிதி தொடர்ச்சி...

வெண்ணந்தூர் க. அருணாசல முதலியார், இராசிபுரம் க. அப்புசாமி, ஏ இராமசாமி, திருச்சி ஆர். செல்வராஜ், கே. ரங்கையன், விசயமங்கலம் செ. சென்னியப்பன், சத்தியமங்லம் பி. லிங்கப்மன், சிவகிரி பி. கஜபதி, அம்மாபேட்டை இரா.மாசிலாமணி, நாமகிரிப்பேட்டை பி. லட்சுமணன், ஆகிய 35 பேர் ரூ. 10 வீதம் 350 00

அழகிரிகுளம் வி. தாமோதரன், புல்லம்பாடி ஏ. தேவராசு, சீர்காழி திட்டை தில்லைவிடங்கன், தஞ்சை கோ. சு. வேதாரண்யம், குப்பகோணம் பி. சிவகாமி, இராம்நகர் எம். லோகநாதன், புதூர் டி. என் சி. கோவிந்தசாமி சூகலூர் எஸ். நச்சியப்ப கவுண்டர், கோவை ஜி. ஆர். பாலுசாமி, ஏ. பி. குமாரசாமி, பு. பெ. கந்தவேல், கொமாரபாளையம் கே. அர்த்தனாரி, மேஸ்திரி, மண்மங்கலம் ஏ வி. இராமசாமி காஞ்சி ஜி. ஜான்ஏசுதாசன், சேலம் எஸ். பழனியப்பன் ஆகிய 15 பேர் ரூ. 10 வீதம் 150 00

தர்மபுரி சி. மணி, வாலாசா சீமன் என்ற கிருட்டினன், வ. ஆ. கே. பி. காதர், வேலூர் ஜி. அருணாசலம், காஞ்சி பி. தாமோதரன், என். சம்பந்தன், ஆர். பெருமாள், சேலம் பிர குப்பமுத்து, கே. இராமசாமி, கே. வைத்தியலிங்க சேர்வை, வ. ஆ சுந்தரகணபதி, நகர் துரைராசன், மன்னார்குடி நரசிம்மன், தஞ்சை மு. நடராசன், வானமாபுரம் வி. ஆர். முருகேசன் பிள்ளை, மன்னவகாடு பி. ஏ; சையது இஸ்மாயில், திண்டுக்கல்-1 என். இராமசாமி, பழனி பி. பழனிச்சாமி, திண்டுக்கல் ரோடு பி. கந்தசாமி, சென்னை-2 ஞானமுத்து, திருவல்லிக்கேணி ஆர். சாகுல் அமீது, சென்னை-7 கோ. துரைசாமி, செங்கை கோ. கிருட்டிணமூர்த்தி, தர்மபுரி ஜி. சிற்றரசு, சென்னை-1டி. சுப்பிரமணியம், செங்கை இராகவன், சென்னை-44 இராமானுசம், கமுதி பி. இளங்கோவன், தெ. ஆ. ந. பாலகிருட்டினன், ஆகிய 28 பேர் ரூ. 10 வீதம் 280 00

ஆக மொத்தம் ரூ. 78,341-25

நடிகர் ஆட்சியில் நடக்கும் கொடுமை!

"விழுப்புரத்தில் ஜூலை திங்கள் 24-ம் தேதி ஏற்பட்ட தகராறு, கலவரத்தைத் தொடர்ந்து நான் அங்கு இருந்து திரும்பியபின் கொடுமையான தகவல்களைக் கேள்விப்பட்டேன்.

ஒரு அரிஜனப் பெண்ணின் மர்ம உறுப்பில் இரும்புத் தடியை சொருகினார்கள், அவளது மார்புகளை அறுத்து கொலை செய்து இருக்கிறார்கள்.

அரிஜன சமூகத்தில் பிறந்த ஒரே காரணத்திற்காக ஏதும் அறியாத அப்பாவி மக்களுக்கு இது போன்ற மனிதத் தன்மையற்ற கொடுமை செய்யப்பட்டது,"

விழுப்புரத்தில் நடந்த கல்வரத்தை ஒட்டி விசாரணை நடத்திட நீதிபதி சதாசிவம் தலைமையில் குழு அமைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறதல்லவா?

அரிஜனப் பெண் கொடுமைப் படுத்தப்பட்டது பற்றி அ. தி. மு. க. துணை அமைப்பாளர் எஸ். அன்பழகன் நீதிபதி சதாசிவம் முன்பாகக் கண்ணீர் வடித்தபடி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு கூடியிருந்த அரிஜனப் பெண்களும் அழுதனர்.

துக்ளக்கின் குதர்க்க வாதம்!

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினை தாயகமே போற்றிக் கொண்டாடுகிறது, தாம் பிறந்த மண்ணில் தம் தொண்டினைத் தொடர்ந்து நடத்தினர், குமரி முதல் இமயம் வரை அவர் தம் ஒப்பற்றத் தொண்டினை நினைந்து மக்களே விழா எடுக்கிறார்கள். மத்திய அரசு பெரியார் நூற்றாண்டு நினைவாக அஞ்சல் தலையை வெளியிட்டது. அவ்விழாவிற்கு, தலைமை யேற்று நீதிபதி திரு மோகன் உரையாற்றினார்.

"தந்தை பெரியார் இல்லாததனால் விழுப்புரங்களும் பேரணும்பட்டுகளும் தோன்றுகின்றன. அரசியல் தலைவர்கள் வைக்கம் வீரர்களாக இருக்க வேண்டும், வைக்கோல் வீரர்களாக இருந்து பயனில்லை.

பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் நேரத்தில், தமிழக அரசிடம் நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன்.

நடைபாதைகளில் இருக்கும் கோவில்களை அகற்ற வேண்டும். இதற்குச் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். இப்படிப்பட்ட கோவில்களை அமைத்தவர்கள் போலியான பக்தர்கள், ஆகமங்களை அறியாதவர்கள். இத்தகைய கோவில்கள், அதில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் ஆகமங்களின்படி அமைக்கப்பட்டவை அல்ல.

இந்தக் கோவில்களை அகற்றுவது, சுயமரியாதை இயக்கத் தலைவரான பெரியாருக்கு நாம் செலுத்தும் மரியாதையாக இருக்கும்"

—பத்திரிகைச் செய்தி

துணிவுமிக்க நீதிபதியின் இந்தப் பேச்சு மக்களின் மத்தியில் அமோகமான வரவேற்பைப் பெற்றிருக்கிறது

செய்தி நிலையங்கள் முறையாக இந்தச் செய்தியை உலகின் பல பாகங்களுக்கும் அறிவித்திருக்குமா? என்பது ஐயப்பாடே ஏனெனில் இந்தியாவிலுள்ள செய்தி நிலையங்களில் ஆதிக்கம் செலுத்துவோர் அவர்களாகவே இருக்கிறார்கள்

தேசிய நாளிதழ்கள் என தம்மை தம்பட்டம் அடித்துக் கொண்டிருப்பவை இப்படிப்பட்ட இனியச் செய்திகளை இருட்டடிப்புச் செய்வதில் இணையற்றவையாக இயங்கி வருகின்றன, எத்தர்களின் வேலைகளை இவை எளிதாகச் செய்கின்றன பகுத்தறிவாதிவாதிகள். இந்தப் பேச்சினை பரவசத்தோடு வரவேற்கின்றனர்.

முற்போக்கு எண்ணங் கொண்டவர்கள் எல்லாம் முழுமனதோடு வரவேற்று வாழ்த்துக் கூறுகின்றனர்.

மூடப் பழக்கவழக்கத்தில் தங்களை முடக்கிக்கொண்டவர்கள் தான் இந்தப் பேச்சினைக் கேட்டு முணுமுணுக்கிறார்கள்

அந்தக் கூட்டத்தில் கோலோச்சும் துக்ளக் விதிவிலக்கல்ல அதன் ஆசிரியர் அலறுகிறார். ஆர்ப்பரிக்கிறார்.

எட்டிக் காயைப்போல் இந்தப் பேச்சினை எண்ணுகிறார். சமுதாயத்திற்குக் கேடு பயக்கும் என்று தவறான மதிப்பீடு செய்கிறார், மூடப் பழக்கத்தில் மூழ்கிவிட்ட இவர் இப்படி மூர்க்கத்தனமாக நீதிபதியைத் தாக்க முனைகிறார்.

நீதிமன்ற நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கியவர் நீதிபதிக்கே போதனை புரிய முன்வருகிறார். இது வேடிக்கையாகவும்இருக்கிறது. வியப்புக்குரியதாகவும் தெரிகிறது.

நீதிபதிகள் வழக்கு மன்றத்தில் தம் கடமையை வரையறுக்கப்பட்ட சட்டத்தில்நின்றுசெயல்படுகிறார்கள். குடும்ப வாழ்க்கையில், சமுதாய வாழ்வில் தமக்கென்று வரையறுத்துக் கொண்ட கொள்கைப்படியும் குறிக்கோள்படியும் வாழ்வதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இது துக்ளக்குக்குத் தெரியாது போலும்!

இன்றுள்ள நீதிபதிகள் பல மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் தாம் சார்ந்த மதத்தின் அடிப்படையில் நடந்துகொள்கிறார்கள். அம் மதத்தை ஒட்டி நடக்கும் மாநாடுகளில் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். தாம் சார்ந்த மதத்தில் ஆழ்ந்த பற்றுக் காரணத்தாலேயே மற்ற மதத்தையோ அதை சார்ந்து இயற்றப்பட்ட சட்டத்தையோ புறக்கணிப்பார்கள் என்று எண்ணுவது எவ்வளவு பேதமை! எத்தகைய கேலிக்கூத்து!

இன்று நாட்டில் காண்கிறோம் போலித் துறவிகளின் கால்களில் வீழ்ந்து கிடக்கின்ற நீதிபதிகளை! செப்படி வித்தை செய்கின்ற ஜெகஜாலப் புரட்டர்களின் சீடர்களாக இருக்கின்ற நீதிபதிகள் எத்தனைபேர்! சமுதாயத்தை செல்லரிக்கும் உளுத்துப் போன சாஸ்திரங்களை உபந்நியாசம் செய்யும் நீதிபதிகள் இந்த நாட்டில் எத்தனைபேர்!

மூடப் பழக்கவழக்கத்தின் முன்னோடிகளாக, சில நீதிபதிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். பூர்வ ஜென்மத்தில் செய்த வினை என்று மக்கள் எதற்கெடுத்தாலும் தங்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிறுத்திக் கொள்கின்றனர். இந்தப் போக்கினை பிரச்சாரம் செய்யும் பிரதிநிதிகளாக எத்தனை நீதிபதிகள் இன்று நாட்டில் உலவிக் கொண்டிருக்கிறார்கள். இவை துக்ளக் கண்களில்படவில்லையா? பொட்டைக்கண் என்று நாம் கூறமாட்டோம். இந்து மத தர்மந்தான் இந்த உலகில் உயர்ந்தது என்று ஊர்தோறும் பிரச்சாரம்

சா. கணேசன்

செய்யும் நீதிபதிகளை நாம் சந்திக்கவில்லையா? கிறித்துவ மதமே உயர்ந்த மதம் என்று உலகுக்குக் கூறிவரும் நீதிபதிகளை இன்று நாம் காணவில்லையா?

இஸ்லாம் மதமே தலையாய மதம் என்று தர்க்க வாதத்தோடுஎடுத்துவைக்கும் நீதிபதிகள் இன்று நியமனத்தில் இல்லையா?

நீதிபதிகள் இவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறார்கள், இது நியாயமா? என்ற விவாதத்தில் நாம் இறங்கிட விரும்பவில்லை.

பகுத்தறிவாளர் நீதிபதி மோகனைக் கண்டிக்க முனைகின்ற 'துக்ளக்' மதங்களைப் பற்றியே மக்கள்மன்றங்களில் மாதக்கணக்கில் பிரச்சாரம் செய்திடும் நீதிபதிகளை இதுவரை விமர்சனம் செய்ததுண்டா? இல்லையென்றால் ஏன்? சனாதனக்கூட்டம் அப்படி செய்யாது! இவர் மட்டும் ஏன் செய்யப்போகிறார்!

இந்துமத தர்மத்தைப் போதிக்கும் ஒரு நீதிபதி, இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர் குடும்ப வழக்கில் எப்படி தீர்ப்பு வழங்குவார்? வழங்கப்படும் தீர்ப்பு நீதியைத்தழுவியதாக இருக்குமா? என்ற கேள்விக்கணையைத் தொடுப்பது எவ்வளவு முட்டாள் தனமோ அவ்வளவு முட்டாள் தனமே பகுத்தறிவாளர் நீதிபதி மோகன் அளிக்கும் தீர்ப்பைப் பற்றிக் கணிப்பதும்; விமர்சிப்பதும்.

இஸ்லாம்மதத்தைச்சார்ந்த நீதிபதி ஒருவர் இந்து மதத்தைச் சார்ந்த ஒருவருடைய வழக்கில் தவறான தீர்ப்பை வழங்கிட வாய்ப்பிருக்கிறதே என்று வாதாட முனைவது எவ்வளவு அறியாமையோ அவ்வளவு அறியாமை வாய்ந்தது. நீதிபதி மோகன் அவர்களுடைய தீர்ப்பு இருக்கும்என்றுஎண்ணுவதும்; ஏளனம் புரிவதும்,

காந்தியார் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட ஒரு நீதிபதி, 'காந்தி வழியைப் பின்பற்றுங்கள்'' என அறிவுரை கூறுகிறார்.

ஒருவர் உண்ணாநோன்பு மேற்கொண்டதைஒட்டித் தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என்பதாக கைது செய்யப்படுகிறார். வழக்குப் போடப்பட்டு அந்தக் குற்றவாளி பிரசங்கம் செய்த நீதிபதி முன்னாலே நிறுத்தப்படுகிறார். நீதிபதியைப் பார்த்து அக் குற்றவாளி, "நீங்கள் தானே காந்தியடிகளின் வழியைப் பின்பற்றச் சொன்னீர்கள். உண்ணாவிரதம், தற்கொலை முயற்சி எப்படியாகும்?'' என்று!

காந்தியடிகளின் கருத்துக்களைக் கூறிய நீதிபதியின் தீர்ப்பு இவ் வழக்கில் என்னவாக இருக்க முடியும்? துக்ளக் இதற்குப் பதில் கூறுமா?

சமயத்தில் பற்றுகொண்ட இராமசாமிக்கு அத்துறையிலேயே விளக்கம் கேட்பது விவேகமாக இருக்கும்!

சமயக் குரவர் நால்வரில் ஒருவர் இளமையிலே ஞானம் பெற்றதாகக் கூறப்படும் ஞானசம்பந்தர் கடவுளை வேண்டுகிறார்:

'மக்கள் வறுமையில் வாடுகிறார்கள் வளத்தைத் தாருங்கள்; அவர்களின் பசியைப் போக்குங்கள்; பட்டினியை ஒட்டுங்கள் அறிவிலிகளாக இருக்கிறார்கள் அவர்கட்கு அறிவை ஊட்டுங்கள்' என்று கடவுளை வேண்டியிருப்பார் போலும் என்றுதான் எவரும் எண்ணுவர்.

ஆனால் ஞானசம்பந்தரோ (தொடர்ச்சி 12-ம் பக்கம்)

தமிழ்நாட்டு யுலிசிஸ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறான். அவர்கள் தனக்குப் புரிந்த உதவிகளை, வீரச்செயல்களை வெளியிட்டபோது அவ்வீரர்கள் இன்பக் கடலில் ஆழ்ந்தனர். முதுமை எய்தினமே, இன்னும் இளமை இருந்தால்எத்துணையோஆற்றலாமே என்று ஏங்கினர்! பகல் முடிந்து இரவு வந்துற்றதாகப் பரிதவித்தனர். அதற்கு யுலிசஸ், முதுமையிலும் சாதனைகள் புரியலாம் என எழுச்சியூட்டினான்! தான் ஆற்றவிருக்கும் திட்டத்தை மெல்ல அவிழ்த்தான். அவர்கள் அவனோடு அன்று இணைந்து ஆற்றலைக் காட்டியதைப்போல், இப்பொழுதும் இணைந்து பணியற்றக் கேட்டுக்கொண்டான். தன்னைச்சுற்றியுள்ள நாடுகளை வென்றதால் மட்டும் அவன் வெற்றி வேட்கை நிறைவு பெற்றிடவில்லை; ஆதவன் எங்கு சென்று மூழ்குகின்றானோ அதற்கப்பாலும் சென்றுவெற்றியை நிலைநாட்ட விழைந்தான். எடுத்த பணியை முடிக்காமல் இறந்து போனாலும், இறப்புலகில் தன் ஆற்றல் நிறை தலைவனான அக்கிலஸ்ஸைச் சந்தித்து, அளப்பரிய தம் சாதனைகளை எடுத்துரைக்கலாம் என்றான். இறுதியாக அவன் கூறியவைகள் வரலாற்றில் பொறிக்கத்தக்க பொன் வரிகள் ஆகும். அவன் அவர்களை நோக்கி, தான் தீட்டியுள்ள திட்டத்தில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும் - அந்த முயற்சியிலிருந்து பின்வாங்காமல் முன்னேறிச் செல்வேன் என்று முழங்குகின்றான்.

இவ்விழுமிய வீரனை எண்ணும்போது, நம் தானைத் தலைவன் டாடர் கலைஞர் நம் கண்முன் நின்று புன்னகை புரிகிறார். யுலிஸஸ் மறைந்து விடவில்லை, தமிழகத்தில் கலைஞராக உருப்பெற்று சாதனை புரிகின்றான். ஓய்வை விழையாத உள்ளத்தினனாய், தீட்டிய திட்டத்தில் வெற்றி காணும்வரை அயராமல் பணியாற்றும் அடலேறாய், துன்பங்கள் தொடர்கதையானபோது, எம்மிடம் இன்பம் பெறத்தக்கவழிகளுக்குத் துணைபெற்று — பயனுற்றோர், துரோகம் புரிந்து பறந்திட்டபோதும் — துவளாமல் பணியாற்றினேன் அண்ணா! என்றுரைக்கலாம் அல்லவா? என்ற இன்ப நினைவோடு இன்னல்களைப் புன்னகையால் பொடிப்பொடியாக்கி நாடு வாழ—நலிவு நீங்க அல்லும் பகலும் அயராது ஆற்றும் பெருவீரன் — தமிழினத்தின் ஒரே தலைவன்—ஆம்' தமிழ்நாட்டு யுலிஸஸ்—டாக்டர் கலைஞர் அவர்களாவார்! கிரேக்க யுலிஸஸ் மறையவில்லை, இதோ இருக்கிறான் தமிழ்நாட்டு யுலிஸஸாக!

அவன் வெற்றி காணும்
வரை ஓயான்;
அவன் வெற்றிக்கு
உறுதுணை புரிய
இருக்கும் மாபெரும்
அமைப்பே தி. மு. க.!
வெல்க, தமிழக
யுலிஸ்ஸஸ்!

தொலைபேசி:கடை:33213 இல்லம்:31922
நாம்நாடுவோர்தவறாமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு-விற்பனை நிலையம்
92 திருப்பரங்குன்றம்சாலை மதுரை
கனிச்சிறப்பு:சிலேபி,தெக்கத்திமிட்டாய்,அதிரசம்,
இனிப்புசேவு,பக்கவடா,மிக்சர்,முறுக்கு,கடலை
நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே.தேவசகாயம்
கிளைகள்: 261.மேலமாசிவீதி, 70.சுவாமிசன்னதி
72.அழகர்கோவில்சாலை,72 CL வன்ஹால்ரோடு, மதுரை.

தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி!

(அனுப்பியோர் பட்டியல்)

3 9—78 தேதிய இதழ் தொடர்ச்சி
75 361—85.

கோவை, ஐ.ஐ. நஞ்சையன், திருச்சி வி.வி.ராமலிங்கம், கோடம்பாக்கம் ஆர். லோகநாதன், முகவை அண்ணாதாசன் பெருமாள்புரம் திருவை, இலக்குவன், சென்னை 1 ஓட்டல் பாபு தொழிலாளர்கள், புத்தூர் ஜி. பி. கிரிஸ்டியன், காஞ்சீபுரம் கே, இராசாராமன், சென்னை 12 செங்கை சிவம், சென்னை-23 இரா. கோ. சுந்தரமூர்த்தி, கலசப்பாக்கம் கே. ஆர் அண்ணாமலை, நெகமம் கே, பாலசுப்பிர மணியம், ஆகிய 12 பேர் ரூ. 25-வீதம் 300 00

சென்னை—26, வடபழனி விசாலம், பாலு, ரேவதி, சுந்தர், கோபி, செகதீசன் ஆகியோர் சேர்ந்து 25 00

கோவை வெ. நா. பழனியப்பன். சி, ஆதிமூலம், கே. என். லோகநாதன், டி. என். பழனிச்சாமி, எஸ். எஸ். தங்கவேலு ஆகியோர் 22 00

கொண்டித்தோப்பு கே. என். தாமோதரன், திருவொற்றியூர் பி.என். நடராசன், திருப்புலியூர் எம். சீனிவாசன் ஆகிய 3 பேர் ரூ, 21—வீதம் 63 00

சிங்காரப்பேட்டை இராசுகிருட்டிணன். ஓமலூர் கே. பி. கன்னியப்பன். கொண்டித்தோப்பு கே. தனபால் ஆகிய 3 பேர் ரூ. 20 வீதம் 60 00

நாடியம் ஆர், இளங்கோ, ஸ்டேட் பாங்க் காலனி ஏ. ஜானகி, ஊனைபள்ளத்தூர் பொன். வேணுகோபால் ஆகிய 3 பேர் ரூ. 20-வீதம் 60 00

வைரபாளையம் வி. எஸ். சுப்பிரமணியம். சேலம் ஆர். பெரியசாமி, குடந்தை பி. வெங்கிட்டு ஆகிய 3 பேர் ரூ. 20—வீதம் 60 00

ஈரோடு, சத்திமேடு ஆறுமுகம் 19 00

வடாற்காடு பா. அலாவுதீன் 18 00

மேட்டுப்பாளையம் ஆர். குப்புசாமி, பள்ளிப்பாளையம் ஆர். காளிதாஸ், தண்டையார்பேட்டை சி. ஆர். சுந்தர வரதன், ஜெ, கனகராசு, பி. செல்லப்பெருமாள், உதகை கே, உச்சி கவுடர், எம். எல். ஏ., கடலூர் எஸ்; எம். கிருஷ்ணன். புதுவை வி. சுந்தரராஜன், கரல் குளம் ஆர். சோதிலிங்கம். காந்திபுரம் 18-வது வட்ட தி. மு. க., உடுமலைப்பேட்டை கே. மலையாண்டி, தண்டையார்பேட்டை ந. சச்சிதானந்தம்; பி. டி சி., பணிமனை ஏ முருகேசன், பொள்ளாச்சி ஆர். எம். சரன். மண்டபம் எஸ், எம். அஜ்மல். மதுரை வி. பழனியப்பன். ஆகிய 16 பேர் ரூ. 15—வீதம் 240 00

சென்னை-81 பி.டி.சி. பணிமனை என். நாகலிங்கம், டி. பாலசுப்பிரமணி, வி. முனுசாமி. என். லட்சுமி நாராயணன், ஏ. முனிரத்தினம் எஸ். குணநிதி. கே. சபாபதி ஆகிய 7 பேர் ரூ. 12 வீதம் 84 00

சென்னை—81. பி. டி. சி. பணிமனை பி, காவேரி. செங்கை-2 குளம் டி. ஆர். சின்னதுரை, நெல்லை ஏ. ராமலட்சுமணன், பம்பாய் எம். எல். கேம்ப் வி கலியபெருமாள், சிகிவரி என். பெரியசாமி, நெல்லை 11 எ. அலியாகத் கலைஞர் நகர் கே. வி. பரமசிவம், திருப்பத்தூர் ஜி. வெங்கட்ராமன். உறையூர் ஜே. அமானுல்லா ஆகிய 9பேர் ரூ. 11-வீதம் 99 00

வ. ஆ. காந்தி ரோடு பி. கமால்பாஷா, பி. ஜெயா அம்மாள், கி. பொன்னையா, நெய்வேலி என், கலிய பெருமாள், மணப்பாறை டி. சின்னதுரை. சாத்தூர் ஈ. இராசேந்திரன், திருச்சி எம். எஸ். மணி (ஜனதா) கீழராணி கே. மாணிக்கம், சென்னை ரெட்ஹில்ஸ் என். இராமலிங்கம், ஆகிய 9 பேர் ரூ. 11—வீதம் 99 00

ஈரோடு வாய்ப்பாடி சி. கழுகாசலம் (10. 40), விழுப்புரம் எஸ். கோவிந்தராசன், ஜி. லட்சுமணசாமி சி, மாசிலாமணி ஆகிய 4 பேர் ரூ. 10-வீதம் 40 40

கமாபட்டி, வி. வி. ஆர் வீரணன், சங்கிலியாண்டபுரம் கலைஞர் நற்பணிமன்றம், பெங்களூர் டி. முனுசாமி. கே. இராமையா, தெ. ஆ. பி, ஆறுமுகம். திருவல்லிக்கேணி ஆர். கோவலன் வலசரவாக்கம் தெய்வசிகாமணி, பெருமாள்பேட்டை எஸ். தேசிங், திருவல்லிக்கேணி நுங்கம்பாக்கம் எம். டி; ஆர். நாதன். பி அண்டு சி. மில் ஜி, கிருஷ்ண மூர்த்தி. சென்னை-7 எஸ். தீனதயாளன் பி அண்டு சி மில் எம் மூர்த்தி, ஐ. சி. எப், தனராஜ், ஜெகநாதன், என். கபாலி, சென்னை:18 ஆர். விஜயா. திருவல்லிக்கேணி, பி. ஜே. பிரசாத் கோட்டூர்புரம் வி. கோவிந்தசாமி. சாலிக்கிராமம் ஆர். கோவிந்தன், நுங்கம்பாக்கம் தே அய்யலு, சாலிக்கிராமம் என் செல்லச்சாமி, ஆழ்வார் திருநகர் பி. ஆர். சிங்காரம், சி. சுப்பிரமணியன், வடபழனி பி. ஜெகநாதன், ஜாபர்கான்பேட்டை ஆர். பச்சை வண்ணன், அசோக் நகர் டி, கன்னியப்பன், அயன்புரம் தி. மு. கதிரவன், மௌபரீஸ் சாலை ஆர். ஆதிகேசவன், ஏ. செல்வராசன், அபிராமபுரம் வி. ஜெயராமன் வடபழனி சிவப்பிரகாசம், எல். மாரியப்பன், அடையாறு பி. வி. அரங்கநாதன், கோட்டூர்புரம் பி. சையத் சாந்த. சென்னை—16 டி. தனராஜ், திருவான்மியூர் ஏ. வி, முனியாண்டி, கோட்டூர் எஸ். ராதா, அடையாறு என். ராசகோபால். திருவான்மியூர் பி. கருப்பையா, கே. அரங்காமி, ஆர். இராமலிங்கம், பேகம் சாகிப் தெரு ஜே. கவுஸ்பாஷா. கோட்டூர் எஸ் பழனி, மைலாப்பூர் எஸ். வி. வேலு, மண்டபம் ஏ. முகம்மது மீராசா, திருவில்லிபுத்தூர் ஏ.பி. வி. பழனிசாமி, மதுரை சி, பி. பிள்ளை தல்லாகுளம் டி. ரத்தினம், பெரம்பலூர் எஸ். அங்கப்பன் ஆகிய 50 பேர் ரூ. 10—வீசம் 500 00

மதுரை—5 மு. ஞானச்சகரன், மண்டபம் என். அலிகான், அம்மாபேட்டை சந்திரசேகரன், வை. சிங்காரவேல், எஸ். லோகநாதன், செல்வி, எல். ரேவதி, செல்வி எல். புனிதம், எல். இராதாமணி, கோவை இரா. சீனிவாசன். கூத்தல்தொறை கே. வி, காரமடம், ஜே. பி. கிருட்டிணன். அபிராமபுரம் முருகேசன் சியமளா, சைதை தி. மா. இராகவன், மயிலை மு. இளவரசு. லட்சுமிபுரம் என் மணி, மணப்பாறை கே. எஸ். இராமன், கே. கஸ்தூரிராஜ், எஸ். அருணசலம், சென்னை—18 ஏ. பாலகிருட்டிணன். தண்டையார்பேட்டை பி.டி. சி. பணிமனை ஆர். இராதா கிருட்டிணன், பெரம்பூர் என். அமிர்தவாசகம், மணலி ஜி. வேலு, மலைரெட்டியூர் ஆர். கே. கில்மன், காஞ்சிபுரம்—2 மு. இராமசாமி, ஆயிரம்விளக்கு ஆலன் வில்லியம்ஸ், கொருக்குப்பேட்டை ஏ. நடராசன், அலெக்சாண்டர், தண்டையார்பேட்டை ஆர். சிங்கராயன், எம். வெங்கடேசன், ஆயிரம்விளக்கு பி. பத்மநாபன், பனழுயவண்ணை கே: ரத்தினம், எஸ். குழந்தைசாமி, ஜி, ஜெயசந்திரன், சென்னை—21 வி. பாலன் ஆகிய 34 பேர் ரூ. 10—வீதம் 340 00

சென்னை—21 சகாதேவன், எண்ணூர் ஏ. பாலசுப்பிரமணியம், திருவொற்றியூர் பி. துரைக்கண்ணு. இடைப்பாடி, வி. குழந்தை, சின்னப்பட்டி பி. நல்லதம்பி, திருச்சி. என். வி. பெரியசாமி. விழுப்புரம் ஏ. அப்துல் அமீத, பாண்டி கணபதி, உருளையன் பேட்டை கலியன், முதலியார்பேட்டை பி. தங்கவேல், வை. சண்முகசுந்தரம், த. மாரியம்மாள், குச்சிப்பாளையம் சி. மறைமலை, திருக்கோவிலூர் அக்பர் அலி, எஸ். முனுசாமி, கே. கோபிகிருட்டிணன் ஆகிய 16பேர் ரூ. 10—வீதம் 160 00

சென்னை அக்பர் அலி, ஏ. முகமது இக்பால், பி. கே. நிசார் அகமத், ஒ. கே. நிசார் அகமத், ஆகியோர் சேர்ந்து 10 00

சூளைமேடு பி.அப்துல் காதர், சிவகாசி கே. பெரியசாமி, வ. ஆ. சின்னதாயம்மாள், மேட்டூர் அணை தா. நடேசன், செவ்வாய்ப்பேட்டை எம். சிங்காரம், அமைந்தகரை சு.வே. தட்சிணாமூர்த்தி, நாமக்கல் இரா. மார்க்கண்டேயன். தேனாம்பேட்டை எல். எம். இராசு, சென்னை 21 ம. கமலக்கண்ணன், சென்னை-3 ஆசைமுத்து, வியாசர்பாடி எஸ். கிருட்டினன், செவ்வாய்பேட்டை எஸ்.நடராசன், வ.சித்தூர் சி. சிராஜுதீன், நீலகிரி அகிலாண்டம், மாயூரம் எம். எஸ். அபிப்ரகுமான், திருச்செங்கோடு ஏ. கோபால், முடிச்சூர் பி. தம்பிரான், நாமக்கல் எம் தனபாக்கியம் குருசிலாப்பட்டு கே. ஏ. வெங்கடாசலம், டி. என். புதூர் டி. எம். ஆர். சந்திரன், பூசாரிப்பாளையம் சி மாரிமுத்து, நீலகிரி மருகன், கோலார் தங்கவயல் கணேஷ் இந்து மிலிடரி ஒட்டல் பி. சூரியமூர்த்தி, உதகை சுப்பிரமணியம்.

[தொடர்ச்சி -ம் பக்கம்]

டில்லியில் நான் ஒரு அந்நியன்...

8-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பு மத்திய அமைச்சர் ஒருவர் பகிரங்கமாக விடுத்த சுற்றறிக்கையொன்று என் நினைவுக்கு வருகிறது. கடிதப் போக்குவரத்தில் இந்தியைப் பயன்படுத்தும்படி அவர் இந்தச் சுற்றறிக்கையில் அனைவருக்கும் அறிவுறுத்தி இருந்தார். அவர்கள் இந்தியில், போதிய புலமை பெறுதவர்களாக இருந்தால், தங்களுக்குத் தெரியாத சொற்களுக்கு இணையான தங்களுடைய தாய் மொழிச் சொற்களை தேவநாகரி வரிவடிவத்தில் எழுதலாம் என்றும் அவர் கூறியிருந்தார். இந்தியைக் கொண்டு ஆதிக்கம் செலுத்துவதற்கு அவர்கள் எவ்வளவு அவசரப்படுகிறார்கள் என்பதற்கு இது சான்று. எனக்கு வரும் தொலைபேசிக் கட்டணச் சீட்டிலும், அரசு வாடகைச் சீட்டிலும்கூட இந்த அவசரம் தலைகாட்டுவதைக் காண்கிறேன்.

இந்த ' அவசரச் செயல் தான்'' தேசிய ஒருமைப்பாட்டுக்கு உலைவைக்கிறது எனலாம். அது சுமையைத் திணிக்கிறது. பதவிகளில் கட்டாயத்தை ஏற்படுத்துகிறது. தென்னாட்டவன் என்ற முறையில், சுதந்திரம், தேசிய ஒற்றுமை என்ற கோட்பாட்டையே அது சிரழிக்கிறது எனத் தோன்றுகிறது. "சுருங்கச் சொன்னால், அது ஒரு தேச விரோதச் செயல்' எனலாம் ஆனால், அது அமைச்சரின் குறும்புத்தனம் என்று தள்ளப்பட்டு விடுகிறது ஆனால், இப்படிப்பட்ட குறும்புத்தனங்களில் ஈடுபட ஒரு தென்னாட்டவருக்குச் சிறிதளவும் உரிமை கிடையாது,

அதிகாரிகள், அரசியல்வாதிகள் முதலிய அனைவரது கவனத்திற்கும் இதனைக்கொண்டு வந்தேன். எல்லோருமே இதைக்கவனிக்கிறேன்'' என்று உறுதி கூறுகிறார்கள். இந்தப் பிரச்சினை பற்றிய விவாதத்தை எழுப்புவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகிறார்கள். பற்றுச்சீட்டுகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே அனுப்பப்படும் என எனக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்குப்பொருளேயில்லை என்பதை மீண்டும் மீண்டும் அறிந்து கொண்டேன். எல்லா அலுவலகங்களிலுமே இந்திப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது, இந்தியைப் படிப்படியாகப் பயன்படுத்தும்படி அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இந்தப் பிரிவு உத்தரவுகளை அனுப்புகிறது. இந்த வற்புறுத்தலுக்கு நியாய உணர்வுடைய அதிகாரிகள் கூடக்கீழ்ப்படிய நேரிடுகிறது இந்தப் பிரிவு மக்களை ஏமாற்றும் ஒரு மோசடி. இது நேர்மையற்றது; அதர்மமானது. அண்மையில் ஆட்சிமொழி மாநாடு நடந்த போது பிரதிநிதிகளின் பெயர் பட்டியல் இந்தியில் மட்டுமே அளிக்கப்பட்டது. ஆங்கிலப் பிரதி இருக்கிறதா எனக் கேட்டதற்கு "ஆங்கிலப்பிரதி ஒன்று இருப்பதாகவும், ஆனால் அது கோப்புப் பிரதி'' என்றும் ஓர் அதிகாரி கூறிவிட்டார்.

1971 ஆம் ஆண்டில்மொழி வாரிப் புள்ளிவிவரத்தை அரசிடம் அதிகாரிகள் அளித்தார்கள். அதனை வெளியிடுவதற்கு அரசு தயங்குகிறது. முந்தைய அரசு இந்த அறிக்கையை மூடி மறைத்துஇருட்டடிப்புச் செய்தது. இன்றைய அரசும் அதையே செய்கிறது,

(தொடரும்)

என்ன பயன் ஏற்படும்?

புதிதாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் மது விலக்குப்பற்றிய அவசரச் சட்டம் ஆளுங்கட்சியினரையும் காவல்துறையினரையும் அனுசரித்துத்தான் மக்கள் வாழவேண்டும் என்ற பீதிநிறைந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்; இது கடுமையானதும், எதிர்க் கட்சிகளைப் பழிவாங்கக் கூடியதும், சொந்தக் கட்சிக்காரர்களை மிரட்டக் கூடியதுமான சட்டமாகும்; இதன் பெயரால் அதிகார துஷ்பிரயோகம் செய்து மக்கள் உரிமையைப் பாதிக்கிற காரியங்கள்தான் நடைபெறப் போகின்றன; இதனால் ஆளுங் கட்சிக்காரர்களுக்கும், காவல்துறையின் ஒரு பகுதியினருக்கும் மாமூல் தான் உயரும்.

பொதுவாக விஷ சாராயம் விற்பவர்கள், தயாரிப்பவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் இருவிதக் கருத்துக்களுக்கே இடமில்லை. ஆனால் அவர்களில் பெரும்பாலோர் இன்று ஆளுங்கட்சிப் பிரமுகர்களாகவும் — மாதா மாதம் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மாமூல் பெற்று அந்தத் தொழிலுக்குப் பாதகாப்பாகவும் இருந்து கொண்டு முதலமைச்சரின் நெருங்கிய நண்பர்களாகவும் குறிப்பாக அந்தக் கட்சியின் அமைப்பாளராகவும் இருந்து வருகிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல; நாட்டு மக்களே உணர்ந்திருக்கிறார்கள். அவர்களை ஒருபுறம் மறைமுகமாக ஊக்குவித்துவிட்டு பொதுமக்களைக் கவருவது போல மதுவிலக்குச் சட்டத்தை அறிவிப்பதால் என்ன பயன் ஏற்படும் என்றே தெரியவில்லை.

தலைவர் கலைஞர்.

துக்ளக்கின் குதர்க்கம்

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுளைப் பார்த்து "சமணர்களின் மனைவியர்களைக் கற்பழிக்க கடவுளே அருள் புரிவாயாக!'' எனும் பொருள் பொதிந்த பாடலைப் பாடி வேண்டுகிறாராம். தேவார மாநாட்டில் கலந்துகொண்டு இக் கருத்தினை உருக்கத்தோடு எடுத்துக் கூறிய நீதிபதியின் முன்னால் கற்பழிப்பு செய்த குற்றவாளி ஒருவன் "ஐயா நீதிபதி அவர்களே! திருஞான சம்பந்தர் செய்ய விரும்பி கடவுளை வேண்டிய காரியத்தைத்தானே நானும்செய்தேன். நீங்கள்தானே ஒருநாள் சமயப் பிரச்சாரம் செய்தீர்கள். எனவே நான் கற்பழித்தது எப்படித் தவறாகும். ஞான சம்பந்தரே கற்பழிக்க கடவுளை அருள் புரிவாயாகஎன்று வேண்டுகிறாரே என்று வாதித்தால் நீதிபதியின் தீர்ப்பு எப்படி இருக்கும்? அல்லது எப்படி இருக்க வேண்டும்?

அந்த நீதிபதியின் தீர்ப்பு எப்படி இருக்குமோ அப்படித்தானே நீதிபதி மோகன் அவர்களின் தீர்ப்பும் இருக்கும். அப்படி இருக்குமானால் எப்படித் தவறாகும்?

துக்ளக் சோ ஆழ்ந்து சிந்தித்தால் தெளிவு பெறலாம். நீதிபதி மோகன் அவர்களைப்பற்றி இப்படி விமர்சிக்க நேர்ந்ததைப்பற்றி சோ வெட்கப்பட வேண்டும். வேதனைப்பட வேண்டும்.

இன்றைக்குள்ள சமுதாயம் எப்படிப்பட்ட நிலையில் உள்ளது என்பதை எண்ணுகிறார். மோகன்.

கோயில் வேண்டாம் என்று அவர்கூறவில்லை. ஆகமங்களின்படி சிலைகள் அமைக்கப்படாத கோயில்களை அப்புறப்படுத்தப் படவேண்டும் என்று ஆணையிடவில்லை; மாறாக அன்பு வேண்டுகோள் விடுக்கிறார் அது கூட. நடைபாதை கோயில்களைப் பற்றி.

பெரியாரின் கொள்கையில் பெரிதும் நிலைக்க முடியவில்லை. காரணம் புரிகிறது. நடைபாதை கோயில்களைப்பற்றி விவேகத்தோடு பிரச்சினைகளை அணுகுகிறார். இதற்கே இப்படிகூச்சல்போடுகின்றதே துக்ளக், ஏன்?

'நடைபாதைகோயில் நடைபாதைவாசிகளுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. போக்குவரத்துக்குதொல்லையாகஇருக்கிறது. வணிக முறையில் கோயில் கட்டும் போக்கு வாடிக்கையாகி விட்டது, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.'' இவையே நீதிபதியின் பேச்சில்புதைந்துள்ள கருத்து. சாதாரண அறிவு படைத்தவர்களுக்கே தெரிந்திருக்க வேண்டிய விஷயம், படித்தவர்களுக்கு, அதிலேயும் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர்களுக்கு இது தெரியாமலா போய்விடும் என்று நீதிபதி நினைத்து விட்டார். அதனால் தான் பெரியாருக்கு நாம்செய்யும் மரியாதை என்று சுருக்கமாகக் கூறிவிட்டார். இதில் எங்கே தவறு இருக்கிறது? மோகன் அவர்களை நிந்திக்க முற்படுகிறார் துக்ளக். உள்ளபடியே நீதிபதியைத் தாக்க முனைவது ஒருபுறம் இருக்கட்டும். பெரியார் கொள்கைகளை பெரும் பள்ளத்தில் புதைக்க வேண்டும் என்பதுதான் துக்ளக் போன்றோரின் எண்ணமாகும்,

நடைபாதைக் கோயில்கள் நாட்டில் நாளும் பெருத்து வருகின்றன. இந்நிலை இப்படியே நீடிக்குமானால்போக்குவரத்துப் பாதைகளெல்லாம் கூட அடைபட்டுப் போனாலும்ஆச்சரியப்படுவதற்கில்லை, இன்றைக்குள்ள பக்திமான் கூட, செல்வந்தர்கூட தங்களுடைய மாளிகைக்கு முன்புறத்தில் நடைபாதையில். பாதையிலே வசிக்கின்ற பக்த கோடிகள் கோயில் கட்டினால் விட்டு விடுவார்களா?

கட்டும் கோயிலில் சாமி சாமி இருக்கிறதே என்று சங்கடப்படாமல் இருக்கிறார்களா!

படித்த கூட்டமானாலும் பக்திக் கூட்டமானாலும் கட்டுகிற கோயில் தங்களுடைய குடியிருப்புக்குக் குந்தகம் என்று நினைத்தால் முக்காடிட்டா மூலையிலே முடங்கிக் கொள்கிறார்கள். முடுக்கோடு செயல்படவில்லையா?

துக்ளக் போன்றவர்களுக்கு இந்தத் தொல்லைகள் நேரக் கூடாது என்பதற்குத் தானே நீதிபதி மோகன் இன்றைய சமுதாயத்துக்கு இடித்துரைத்துக் கூறுகிறார்; நடைபாதை கோயில் அகற்றுவது பற்றி.

நாட்டிற்கு நல்லதொண்டு செய்வோரை நசுக்கத் துப் பார்ப்பதே 'துக்ளக் கும்பலின் வழக்கமாக போய்விட்டது. என்ன செய்வது? தமிழர் சமுதாயம் பெரியாரின் கொள்கைகளை இலட்சியங்களைச் சிந்தித்துப் பார்த்து செயல்படவில்லையே அதனால்தான் அந்தக் கூட்டம் ஆட்டம் போடுகிறது.

நீதிபதி மோகனைத் தாக்க அரசியல் நிர்ணயச் சட்டத்தை துணைக்கு அழைத்துப் பார்க்கிறார்.

'அரசியல் சட்டத்தைக் கொளுத்தியவர் வழக்கில்' தனித் தமிழ்நாடு வேண்டும் என்று கூறுபவர் வழக்கில் பெரியார் பாதையில் செல்லும் நீதிபதி மோகன் தீர்ப்பு எப்படி இருக்கும்?

பெரியார் கொள்கை வழி இருக்குமா? சட்டபடி இருக்குமா? இப்படி சோ குதர்க்கமாக கேள்வி போடுகிறார்.

அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது கூடாது, பிரிவினை கூடாது என்பது அரசியல் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தண்டனை அளிக்கவும் நீதிபதிக்கு அதிகாரம் அளித்திருக்கிறது. சட்டப்படி செயல்படுவதாக நீதிபதி ஆகும்போது எடுத்த உறுதிமொழிபோல் மோகன் செயல்படுவார். இதில் துக்ளக் ஐயுறத் தேவையில்லை. ஆதங்கப்படத் தேவையில்லை. விஷமப் பிரச்சாரத்தில் வீணாக ஈடுபடத் தேவையுமில்லை.

நீதிபதி மோகன் நியாயமான தீர்ப்பைத்தான் வழங்குவார் என்பதில் துக்ளக் சந்தேகப்படத் தேவையில்லை,

கீதை கூறுகிறது, 'அறிவு எங்கேயிருந்தாலும் அதை எடுத்துக் கொள்வோம்' என்று. குறளும் இதையேகூறுகிறது. அதை எடுத்துக்கூறினால் கசப்பாக இருக்கலாம். எனவே துக்ளக் ஏற்கும் கீதையை நினைவூட்டுகிறோம்.

★

சரசுவதி பூஜை கொண்டாடும் நாட்டில்...

இருபத்து மூன்று கோடி இந்திய மக்கள் (பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள்) கல்வியறிவு இல்லாதவர்கள்; அவர்களுக்கு அறவே எழுதவோ, படிக்கவோ தெரியாது''

—மத்திய கல்வி அமைச்சகப் வெளியிட்ட புள்ளி விவரம் இவ்வாறு கூறுகிறது.

கோட்டைக்குள்ளே குத்துவெட்டு!

இன்றைய கூட்டத்தில் அவ்வப்போது காரசார விவாதம் ஏற்பட்டபோதிலும் பெரும் மோதல் எதுவும் நிகழவில்லை.

சர்க்காரின் சாதனையை ராஜ்நாராயண் குறைகூறியபோது அவரது ஆதரவாளர் மணிராம் பக்ரி, குறுக்கிட்டு பேசுகையில் சர்க்கார் தனது உறுதி மொழிகளைச் செயல்படுத்தத் தவறினால் மக்கள் செருப்புகளை வீசுவர் என்று குறிப்பிட்டார்.

உ. பியைச் சேர்ந்த மோகன்லால் பிபால் உடனே தமது செருப்பை கையில் எடுத்து, ஆட்டியவாறே விவாதத்தின் தரத்தைக் குறைக்க வேண்டாம் என்று பக்ரியை எச்சரித்தார்.

—தினமணி 5-10-78

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் — பெண் கேன்வாசர்கள் தேவை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயணசெட்டிதெரு, இராயபுரம், -600013) அச்சிட்டுவெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009